இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆதரிப்பது என்ற முடிவை கூட்டமைப்புத் தலைமை எடுத்தமையால் பெரிதும் மனம் நொந்து போயிருக்கின்றார் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவை நேற்றுக் பக்கம் 02

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 14 | வெள்ளிக்கிழமை 30.11.2018 | கதிர் 25

## கொழும்பு அரசியலில் திடீர்த் திருப்பம்

# ஜனாதிபதி – சபாநாயகர் நேரில் சந்தித்துப் பேச்சு

### ஐ.தே.மு., கூட்டமைப்பு, ஜே.வி.பியுடன் கலந்துரையாடி நெருக்கடிக்குத் தீர்வு காண்பேன் என மைத்திரி உறுதி

கொழும்பு, நவம்பர் 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் இடையில் நேற்று மாலை முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

மாலை 4.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. பக்கம் 11

## தீர்மானத்தை ஏற்கமுடியாது இன்றும் அமர்வு புறக்கணிப்பு

### மஹிந்த அணி நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்ற அமர்வை இன்று வெள்ளிக்கிழமையும் புறக்கணிப்பதற்கு மஹிந்த அணி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடக பக்கம் 11

## மஹிந்த அணியில் இருந்து வெளியேறினார் விஜேதாஸ

### சுதந்திரமாக செயற்படப்போகிறார் என அறிவிப்பு



கொழும்பு, நவ. 30

அண்மையில் மஹிந்த ராஜபக்ஷஅரசுடன் இணைந்து, கல்வி, உயர் கல்வி அமைச்சராகப் பதவியேற்ற ஐக்கிய தேசியக் பக்கம் 11

## கடற்படைக்கு துக்கமான நாள்

### அட்மிரர் ரவீந்திர கைது குறித்து முன்னாள் கடற்படை அதிகாரி

கொழும்பு, நவ. 30

பதவி நிலைக்கும் இலங்கைக் கடற்படைக் கோவைக்கும் துக்கமான நாள் இது என்று பக்கம் 02

# ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவு

### ஜனாதிபதிக்கு 14 எம்.பிக்கள் அவசர கடிதம்

கொழும்பு, நவ. 30

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: – பக்கம் 11

## வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டார் ரவீந்திர

கொழும்பு, நவ. 30

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்ட பக்கம் 11

## ஐ.தே. முன்னணியை ஆதரிக்கும் முடிவை கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுக்க முடியாது

### சீறுகின்றார் ரெலோ சிறிகாந்தா

“ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆதரிக்கும் முடிவை கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு தன்பாட்டில் எதேச்சாதிகாரமாக எடுக்க முடியாது. அது தவறு. கூட்டமைப்பின் அதி உயர்பீடமான ஒருங்கிணைப்புக்குழு தான் அத்தகைய கொள்கை ரீதியான முடிவை எடுக்க வேண்டும்.

அப்படியில்லாமல் நாடாளுமன்றக் குழுவில் அத்தகைய முடிவை எடுப்பது பக்கம் 02

## ஜனாதிபதி மைத்திரியை அடிபணிய வைப்போம்!

### சபையில் அநுரகுமார சூளுரை!



கொழும்பு, நவ. 30

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் அரசமைப்புக்கு அடிபணிந்தே ஜனாதிபதி செயற்படவேண்டும். இதைவலியுறுத்தியே நாம் போராடிவருகின்றோம் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார பக்கம் 11

## யாழ். மாநகர சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மாவீரர்கள் மற்றும் போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர். பக்கம் 11

## பெரும்பான்மை உள்ளோரிடம் ஆட்சியைக் கொடுக்கவேண்டும்

### விஜேதாச சபையில் பரபரப்பு உரை

கொழும்பு, நவ. 30

அரசியல் பேதங்களை மறந்து நாம் நாடாளுமன்ற ஜனநாயக முறைமையைப் பின்பற்றவேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பக்கம் 02

## மஹிந்தவுக்கு எதிரான பிரேரணைகளை புறக்கணித்து வருகிறார் சிவசக்தி எம்.பி.

கொழும்பு, நவ. 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் உட்பட நான்கு பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள் பக்கம் 11

## யாழ்.நகரில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுவீச்சு!

### ஓட்டோக்கள் இரண்டு நாசம்



யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாநகர்வைமன் வீதியில் உள்ள வீடொன்றின் மீது பக்கம் 02

## பிரதமர் செயலக நிதியை முடக்க 123 எம்.பிக்கள் ஆதரவாக வாக்கு

### மஹிந்தவுக்கு அடிக்கு மேல் அடி

கொழும்பு, நவ. 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நான்காவது பிரேரணையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த வகையில், மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக் பக்கம் 11

## அரசியல் நெருக்கடிக்கு உடன் தீர்வு காணுங்கள்

### ஐ.நாவின் அதிகாரி மரி யமஷிட்டா மைத்திரியிடம் நேரில் வலியுறுத்து

கொழும்பு, நவ. 30

கொழும்பு வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பணிப்பாளர் பக்கம் 11

# ஐ.தே.மு. அரசை ஆதரிக்க கூட்டமைப்பு எதிர்பார்க்கின்ற பிரதியுபகாரங்கள்

## நேற்று ரணிலைச் சந்தித்துப் பட்டியலிட்டனர் தமிழ் எம்.பிக்கள்

கொழும்பு, நவ.30

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு அளிக்கின்றோம் என்ற கடிதத்தை ஒப்பமிட்டு வழங்கிய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அதற்குப் பிரதியுபகாரமாகத் தாங்கள் பெறக் கூடிய வசதிகள், வரப்பிரசாதங்கள், நன்மைகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்காக நேற்று மாலை 4.30 மணியளவில் அலரி மாளிகையில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பை கூட்டமைப்பு எம்.பிக்களான சிவஞானம் சிறிதரனும், சிவமோகனும் பகிஷ்கரித்தனர் என்றும் அறிய வந்தது.

அரசுக்கு ஆதரவு அளிப்பதற்குப் பிரதியுபகாரமாகத் தாங்கள் எதிர்பாக்கும் விடயங்களைக் கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பட்டியலிட்டனர் என்றும் -


அவை குறித்து சாதகமாகத் தாம் பரிசீலிப்பார் என ரணில் விக்கிரமசிங்க பச்சைக் கொடி காட்டினார் என்றும் - கூட்டத்தில் பங்குபற்றிய எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

கூட்டமைப்பினரின் எதிர்பார்ப்புகள், கோரிக்கைகள் குறித்துத் தொடர்ந்தும் பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கினார் என்றும் கூறப்பட்டது.

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசில் தாங்கள் இணைந்து கொள்ளாமல், வெளியில் இருந்தபடி அந்த அரசுக்கு ஆதரவு தந்தாலும், வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தங்கள் நேரடிப் பங்களிப்பு மற்றும் கணகாணிப்புடன்தான் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் கூட்டமைப்புத் தரப்பால் முன்வைக்கப்பட்டதாக அறிய வந்தது. (உ)

# யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ் ஆற்றில் பாய்ந்ததில் 4 பேர் பலி!

## 23 பேர் படுகாயம்; வலஹாப்பிட்டியவில் சம்பவம்



கொழும்பு, நவ. 30

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த சொகுசு பஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில், நீர்கொழும்பு–சிலாபம் பிரதான வீதியின் வலஹாப்பிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி ஹமில்டன் கால்வாயில் வீழ்ந்ததில் நான்கு பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் 23பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முற்பகல் 10 மணிக்குச் சேவையை ஆரம்பித்த பஸ்ஸே இந்த விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுள் 3 பெண்களும் அடங்குகின்றனர் எனவும், இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்தனர். பலர் மோசமாக காயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை கூட்டிய சம்பந்தன், தமது தீர்மானத்தை மிகக் கடும் தொனியில் அமைந்த வாசகத்தில் காட்டமான உரையாக முன்வைத்தார்.

அவரது சீற்ற உரையைக் கேட்ட சாள்ஸ் நிமலநாதன், யோகேஸ்வரன் போன்ற எம்.பிக்கள் எல்லாம் 'கப்சிப்' என்று அந்த ஆதரவுக் கடிதத்தில் தாங்கள் கேட்டுக் கேள்வியின்றியே கையெழுத்து வைப்போம் என்று பச்சைக் கொடி காட்டினார்.

மாவையரும், செல்வத்தாரும் மட்டும், ஐ.தே.கட்சி தரப்பிடம் எழுத்தில் ஏதாவது உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டு கடிதம் கொடுத்தாலென்ன என்று மெல்ல அணுங்கிப் பார்த்தனர். ஆனால் அது எடுபடவில்லை.

சிறிதரன் மட்டும் சற்று எதிர்ப்புக் காட்டினார் *"எனக்கு இதில் உடன்பாடில்லை. ஆனால் கூட்டமைப்பின் ஒற்றுமையை நான் உடைத்துவிட்டேன் என்று பெயர் வரக்கூடாது அதனால் ஒப்பமிடுகின்றேன்"* – என்று வேண்டா வெறுப்பாக ஒப்பமிட்டார் அவர்.

இக்கடிதத்தை ஒட்டி, நேற்று மாலை அலரி மாளிகையில் ரணிலைச் சந்தித்தனர் கூட்டமைப்பு எம்.பிக்கள். ஆதரவுக்கடிதம் வழங்கியமைக்குப் பதிலாக கிடைக்கக்கூடிய வரப்பிரசாதங்கள் பற்றிய பேரம் பேசலுக்கான சந்திப்புதான் இது.

அதற்கும் சிறி எம்.பி. போகவில்லை, சிவமோகன் எம்.பியும் இந்தச்சந்திப்பைப் புறக்கணித்தார் எனத்தெரிகின்றது. இன்று மாலை கூட்ட மைப்பு எம்.பிக்கள்ஜனாதிபதியை சந்திக்கும் கூட்டத்திற்கும் சிறி எம்.பி போகமாட்டார் என்று தெரிகின்றது.

*"நான் இந்தக் கடிதத்தில் கையெழுத்திடவிட்டால் மஹிந்த ராஜபக்ஷவிடம் காசு வேண்டிக் கொண்டு, கூட்டமைப்புக்கு மாறாகச் செயற்படுகின்றேன் என்று எனது தலைவர்களே எனது பெயரைப் 'நிப்பேர்' பண்ணிவிடுவார்கள், மனசாட்சிக்கு விரோதமாக – எனது விருப்புக்கு மாறாக - இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டேன். ஏன்இந்த அரசியல்என்றுவெறுப்பாகஇருக்கின்றது."* – என தனக்கு மிக நெருக்கமானவரிடம் நொந்து கொண்டிருக்கிறார் சிறிதரன்.

பாவம் சிறி எம்.பி., சம்பந்தன் – சுமந்திரன் கூட்டு நடவடிக் கைக்குள் நசுங்கிப் போனார் சுயா தீனமாகச் சிந்திக்கும் அவர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் முடிவு குறித்துச் சீற்றமடைந்திருக்கும் ரெலோ தனது மத்திய குழுவை நாளை காலை 10 மணிக்கு வவுனியாவில் கூட்டியுள்ளது. அங்கும் சம்பந்தன் – சுமந்திரன் கூட்டுக்கு வேட்டு வைக்கும் தீர்மானத்துக்கு முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன எனத்தெரிகின்றது.

நாளை விடிந்தால் விவரம் தெரியும். அதுவரை பொறுத்திருப்போம்.

-மின்னல்-

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வியாழக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதலில் அந்த வீட்டின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு ஓட்டோக்கள் தீயில் எரிந்தன. மோட்டார் சைக்கிள் இரண்டு அடித்துச் சேதமாக்கப்பட்டன.

8 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆரியகுளம் சந்தியில் கராஜ் வைத்திருக்கும் உரிமையாளர் ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கராஜ் உரிமையாளர் நேற்று முன்தினம் இரவு ஓட்டோக்கள் இரண்டை வீட்டில் கொண்டுவந்து விட்டுள்ளார். நேற்று அதிகாலை 1.55 மணியளவில், பெரும் சத்தம் கேட்டுள்ளது. வீட்டு உரிமையாளர் வெளியே வந்து பார்த்தபோது 8 பேர் முகமூடியுடன் வீட்டின் முன்னால் நின்றுள்ளனர். அந்தக் கும்பல் வீட்டின் கண்ணாடிகள் மற்றும் வாகனங்கள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டது.

அதனால் ஓட்டோக்கள் இரண்டும் தீப் பற்றி எரிந்தன. மோட்டார் சைக்கிள்கள் இரண்டு வாளால் வெட்டப்பட்டுச் சேதமாக்கப்பட்டன. வீட்டின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன.

நான் எவருடனும் எந்தப் பிரச்சினைகளுக்கும் செல்வதில்லை. யார் இவ்வாறான சம்பவத்தைப் புரிந்தார்கள் என்று தெரியாது என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

### கடற்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் கடற்படை அதிகாரியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

11பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் நேற்று முன் தினம் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இது தொடர்பாக, இலங்கைக் கடற்படையின் முன்னாள் அதிகாரியும், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான ரியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம தனது கீச்சகப் பக்கத்தில் நேற்று முன்தினம் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில், பதவி நிலைக்கும் இலங்கைக்கடற்படைக்கோவைக்கும் துக்கமான நாள் என்று கூறியுள்ளார்.(ஐ)

### பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்களுக்கு ஆட்சியமைக்க அதிகாரம் வழங்கவேண்டும். நாட்டின் நன்மை கருதி அது நடக்கவேண்டும்.

– இவ்வாறு நேற்றுச் சபையில் பகிரங்கக் கோரிக்கையை முன்வைத்தார் ஐ.தே.க. தரப்பில் இருந்து மஹிந்த பக்கம் தாவி கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்ற விஜேதாஸ ராஜபக்ஷ.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வை ஆளும்தரப்பு புறக்கணித்தபோது அமைச்சர் விஜேதாஸ மட்டும் சபைக்கு வந்திருந்தார். அவர் அங்கு விசேட உரை ஒன்றை ஆற்றினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் நெருக்கடியால் மக்கள் அதிர்ச்சியில் உள்ளனர். ஜனநாயக கட்டமைப்புக்களின் பாதுகாப்பை நாடாளுமன்றம் உறுதிப்படுத்துகிறது.

நாம் 30 வருட காலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோம். முப்படை வீரர்கள் மட்டுமன்றி இலங்கையர்கள் ஏராளம் பேர் உயிரிழந்தனர். அப்படி ஒரு நிலைமை மீண்டும் வரக்கூடாதென்றே ஒரு ஜனநாயகப் புரட்சி நடந்தது. அதனால் தான் ஐ.தே.க. பொது வேட்பாளராக மைத்திரியைத் தெரிவு செய்தது. நாடு நன்றாக வரவேண்டும் என்பதே மக்களின் அவாவாக இருந்தது. நாட்டின் நன்மை கருதி 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றினோம். நிறைவேற்று அதிகாரத்தின் பல அதிகாரங்கள் நீக்கப்பட்டன. அது முழுமையான தல்ல .

நாங்கள் நல்லாட்சியைத் தேசிய அரசாக அமைத்தோம். பல பிரச்சினைகள், குற்றச்சாட்டுக்கள் வந்தபோதும் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனால் ஒரு கட்டத்தில் இரு தரப்புக்களும் சராசரி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டன. அந்த இரு தரப்பையும் கட்டுப்படுத்த இரு தலைவர்களாலும் முடியாமற் போனது.

அப்படி ஒரு நிலைமையில் தான் திடீரென ஒக்ரோபர் 26 இல் அரசியல் அதிரடித் தீர்மானங்கள் வந்தன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு அது இப்போது நீதிமன்ற விசாரணையில் நிற்கின்றது. பின்னர் சபையில் குழப்பங்கள் ஏற்பட்டன. மக்கள் இன்று செய்வதறியாமல் நிற்கின்றனர். இதுவரை மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

அரசமைப்பு மற்றும் நீதித்துறை அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் உத்தரவை அரசமைப்பு அதிகாரம் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதையும் அரசமைப்பு அதிகாரத்தின் ஆணையை நிறைவேற்று அதிகாரம் ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கும் நிலைமை இப்போது உள்ளது.

அரசியல் பேதங்களை மறந்து நாம் நாடாளுமன்ற ஜனநாயக முறையை பின்பற்றவேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்களுக்கு ஆட்சியமைக்க அதிகாரம் வழங்க வேண்டும். நாட்டின் நன்மை கருதி அது நடக்கவேண்டும். ஒரு கொள்கை உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு இந்த அரசியல் நெருக்கடி முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

நாடாளுமன்ற வேலைகளை ஒரு பக்கம் வைத்து ஜனாதிபதியுடன் பேசி ஓரிரு நாட்களில் இந்தப் பிரச்சினைக்கு முடிவைச் சபாநாயகர் எடுக்க வேண்டும். ஜனாதிபதி இதில் விருப்புடன் இருப்பதை என்னால் அறிய முடிந்தது – என்றார்.

விஜேதாஸ அவர்களே உங்களின் யோசனையை நான் ஏற்கிறேன். ஜனாதிபதியுடன் நான் பேசத் தயாராகவே உள்ளேன். எனக்கு அவருடன் எந்தப் பிரச்சினையும் இல்லை. இதனை நான் பரிசீலிப்பேன்–என்றார் சபாநாயகர். (ஐ)

### ஐ.தே.மு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினத்தின் ஐக்கியத்துக்கு – ஒற்றுமைக்கு – வேட்டு வைக்கும் வேலை."

– இவ்வாறு சீறியிருக்கின்றார் 'ரெலோ' அமைப்பின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா.

ஜனநாயக விரோதமான முறையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டமை குறித்து கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு, அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் கோரிக்கையின் பேரில் கடந்த 2 ஆம் திகதி கூடி ஆராய்ந்தது. மஹிந்தவின் ஆட்சியை முழு அளவில் எதிர்ப்பது என்று தீர்மானித்தது. அதற்கு அப்பால் போவதில்லை எனவும் முடிவு செய்தது.

ஆனால், இப்போது கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு ஒரு கொள்கை ரீதியான முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த முடிவை அக்குழு எடுக்க முடியாது.

அப்படி எடுப்பதாயின் கூட்டமைப்பின் அதியுயர்பீடமான ஒருங்கிணைப்புக் குழுவே அது குறித்து விரிவாக ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும்.

நாடாளுமன்றக் குழுவின் தீர்மானம் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளைக் கட்டுப்படுத்தாது. நாம் அந்த முடிவுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர்.

ரணிலுக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ முண்டு கொடுப்பதற்கு கூட்டமைப்பு ஒரு போடுதடியல்ல.

தென்னிலங்கையில் அதிகாரத்துக்குப் போட்டியிடும் பேரினவாத, சிங்களக் கட்சிகளில் ஒன்றின் பக்கம் சாய்வது என்பது விட்டேத்தியாகத் தீர்மானிக்கக் கூடிய விடயமும் அல்ல.

யார் பிரதமர், அவர் எந்த வழி செல்லப்போகின்றார் என்பவை பற்றி எல்லாம் அறியாமல், வெற்றுக் காசோலையில் ஒப்பமிட்டு அளிப்பது போல ஆதரவைக் கண்மூடித்தனமாக ஒரு தரப்புக்கு அளிக்க முடியாது; அளிக்கவும் கூடாது.

ஒட்டு மொத்தத் தமிழினமும் இந்த விவகாரம் குறித்து அதீத அக்கறையும், கவனமும் காட்டி வருகையில், சரியான கலந்தாலோசனைகள், உரையாடல்கள் இல்லாமல் இப்படி ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றக் குழு தன்பாட்டில் எடுக்க முடியாது.

ஒட்டு மொத்தத் தமிழர்களினதும் பிரச்சினை சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய விடயம் இது.

அப்படி நாடாளுமன்றக் குழு எடுத்த தீர்மானம், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளைக் கட்டுப்படுத்தாது. அது தமிழ் மக்களினதும், கூட்டமைப்பினதும் ஐக்கியத்துக்கு வேட்டு வைக்கும் முடிவு.

இதனை, இந்த முடிவை எடுத்துச் செயற்படத் துடியாத் துடிக்கும் தரப்புகளுக்கும் தலைவர்களுக்கும் சொல்லி வைக்க விரும்புகின்றேன். – என்றார் ஸ்ரீகாந்தா. (உ)

# அரச சொத்துக்களை ரணிலும் தவறாகப் பயன்படுத்துகிறார்

## ஜே.வி.பி. சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 30

அலரி மாளிகையில் தொடர்ந்தும் தங்கிருப்பதன் மூலம், அரச சொத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்ரணில்விக்ரமசிங்கவும்தவறாகப்பயன்படுத்துகிறார் எனமக்கள்விடுதலை முன்னணியின்தலைவர்அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்துக்கான நிதியொதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மஹிந்தவுக்குப் பெரும்பான்மை இல்லை. மக்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது அலுவலகத்துக்கு அரச நிதி ஒதுக்கப்படுவது சட்டவிரோதமானது. அந்தவகையில், பிரதமர் அலுவலகம், அமைச்சரவை ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதியை உடன் நிறுத்தவேண்டும்.

அதுமாத்திரமன்றி, அலரி மாளிகைக்கும் அரச நிதி பயன்படுத்தப்படுகிறது. அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அலரி மாளிகையை விட்டு ரணில் விக்கிரமசிங்க வெளியேறவேண்டும்–என்றார்.



இதற்குப் பதிலளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன்கிரியெல்ல, அலரிமாளிகைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் நிதியே இப்போது பயன்படுத்தப்படுகிறது – என்றார்.

(ஐ)

# உச்சக்கட்ட பதற்றத்தில் ராஜபக்ஷ தரப்பினர்

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளத் தவறிய முன்னாள் அமைச்சர் பஸிலில் ராஜபக்ஷவை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடுமையாகத் திட்டியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பெரும்பான்மையை நிரூபிப்பித்துக் காட்டுவதாக உறுதியளித்த பஸிலினால் அதனைச் செய்ய முடியாமையால் படுதோல்வி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மஹிந்த கடும் கோபம் அடைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 15 உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் மஹிந்தவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருமாறும், பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பிரதமர் பதவியில் இருந்து விலக முடியாதெனக் கூறிய மஹிந்த, அந்த உறுப்பினர்களுக்கு முன்னால் பஸில் ராஜபக்ஷவுக்குத்தொலைபேசி அழைப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

உங்களால்தான்இந்த நிலைமைக்கு வந்துவிட்டேன் எனக் கடும் கோபமாக மஹிந்த திட்டியமையால் பஸில் அழைப்பைத்துண்டித்தார் எனத் தெரியவருகிறது.

நாடாளுமன்றில் தற்போது வரை பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளமுடியாமையால் மஹிந்த சற்றுப் பதற்றத்துடன் உள்ளார் எனத் தெரியவருகின்றது.

(ஐ)

# விக்கிக்கு மீண்டும் பொலிஸ்; ஜனாதிபதி – பிரதமர் ஆராய்வு

கொழும்பு, நவ. 30

வடக்குமாகாணமுன்னாள் முதலமைச்சர்சி.வீ. விக்னேஸ்வரனுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பை வழங்குவது குறித்து ஜனாதிபதி சிறிசேன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஆராய்ந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

தனதுபொலிஸ்பாதுகாப்பு நீக்கப்பட்டமைகுறித்துஜனாதிபதிக்குவிக்னேஸ்வரன்நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தில்பல மாதங்களுக்கு முன்னர் பதவிக்காலம் முடிவடைந்த கிழக்கு மாகாண முன்னாள்முதலமைச்சர் நசீர் அகமத்துக்கு இன்னமும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்டி இருந்தமையுடன் தனக்கு விடுக்கப்பட்டிருந்த உயிராபத்து எச்சரிக்கை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே விக்னேஸ்வரனின் பொலிஸ் பாதுகாப்பை மீண்டும் வழங்குவது குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் ஆராய்ந்துள்ளனர்.

(ஐ)

# நாட்டு மக்களிடம் மைத்திரி மன்னிப்பு கோரவேண்டும்

## பிமல் ரத்நாயக்க சபையில் கோரிக்கை

கொழும்பு, நவ. 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும், தற்போதைய அரசை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார். .

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மைத்திரி – மஹிந்த சூழ்ச்சித்திட்டத்தை தோற்கடிப்பதாக நாங்கள் கூறினோம்.

மேற்குலக நாடுகளை



ஒருபுறம் ஒதுக்கி வைத்தாலும் மாலைதீவு, சுவாசிலாந்து போன்ற நாடுகள் கூட மஹிந்த ராஜபக்ஷ அரசை அங்கீகரிக்கவில்லை. கறுப்பு ஊடகங்கள் நாட்டை ஆட்சி செய்கின்றன.

ஸ்ரீலங்கன்விமானசேவை நிறுவனத்துக்கு மர முந்திரிப் பருப்புக்களை விநியோகிக்கும் நபரை விரட்டவும் ஆஸ்திரியாவுக்கான தூதுவரைப் பதவி நீக்கவுமே ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவது புற்றுநோயாக மாறியுள்ளது. மற்றுமொருவர் கட்சிதாவத்தயாராக இருப்பதாக தெரிகிறது. அவரது பாட்டனார் கங்காருவா?

ஜனாதிபதி இரண்டாவது முறையாகவும் தேர்தலில் போட்டியிடமேற்கொண்ட சூழ்ச்சியால் ஏற்பட்டுள்ள நட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்துவாரா?

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தற்போது குமார வெல்கம போன்ற ஒருவர் தேவை– என்றார்.

(ஐ)

# எந்தப் பிரேரணையையும் எதிர்கொள்ள நான் தயார்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 30

நம்பிக்கையில்லாப் பிரேரணை, நம்பிக்கையை நிரூபிக்கும் பிரேரணை எதனையும் எதிர்கொள்ளத் தயார் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம்கட்சியின்உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுடனான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தாமரை மொட்டு உள்ளிட்ட அணியினருக்கு நாடாளுமன்றில் 100 உறுப்பினர்களின் ஆதரவைக் காட்டமுடியுமா எனக் கேட்கிறேன்.

அப்படி இல்லையேல் உங்களுக்கு இருக்கும் உரிமை என்ன?, அதிகாரம் என்ன?, உங்களுக்கு அமைச்சரவைக்குள் நுழைய முடியாது. பலவந்தமாக அரசை அமைக்க முடியாது. அந்தக்



காலம் முடிந்து விட்டது.

2015 ஓகஸ்ட், செப்ரெம்பரில் இருந்து நாடாளுமன்றில் எங்களுக்கு பெரும்பான்மை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

எந்தநேரத்தில்நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அதனைத் தோற்கடிக்கவும், நம்பிக்கையைக் காண்பிக்கும் யோசனையைக் கொண்டு வந்தால், அதனை வெற்றிகொள்ளவும் தேவையான பெரும்பான்மை எம்மிடமே இருக்கிறது– என்றார்.

(ஐ)

# மன்னார் பொது வைத்தியசாலையில் குறைபாடுகளை நீக்கக் கோரி மகஜர்

மன்னார், நவ. 30

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பொது மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரைவில் நிவர்த்தி செய்ய கோரி மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 1000 பொதுமக்களால் கையெழுத்திடப்பட்ட இந்த மகஜர் பிராந்திய சுகாதாரப் பணிமனை திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியரிடம் நேற்று வியாழக்கிழமை காலை கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் உருவாக்கப்பட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பின் எற்பாட்டில் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் சிங்கள வைத்தியர்கள் அதிகமாக இருப்பதால் மக்களால் நோய்களைத் தெளிவாக வைத்தியர்களிடம் வெளிபடுத்த முடியாமை,தகுந்த சிகிச்சைகள் வழங்குவதற்கு ஏற்ற வசதியின்மை, நோயின் தன்மையை நோயாளருக்கு வெளிப்படுத்தாமை ,நோய்த் தன்மைக்கு



ஏதுவாக இல்லாமல் சக்தி வாய்ந்த மருந்துகளை வழங்குதல், இறந்த உடல்களை வெகுவிரைவில் உரியவர்களிடம் ஒப்படைத்தல்,நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் தொலைபேசி பாவனை போன்றவற்றால் குறைபாடுகளை மக்கள் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருவதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஒளித்துப் பிடிக்கும் கூட்டமைப்பு

ஐக்கிய தேசியக்கட்சியுடனோ, ஐக்கிய தேசிய முன்னணியுடனோ தன்னை அடையாளப்படுத்தாமல் இதுவரை ஒளித்துப் பிடித்து விளையாடி வந்த தமிழ்க் கூட்டமைப்புத் தலைமை கடைசியாக தனது சுயரூபத்தை வெளியில் காட்ட வேண்டி வந்துவிட்டது.

*“நாங்கள், சுதந்திரக்கட்சி – பொதுஜன பெரமுன கூட்டுப் பக்கமும் இல்லை, ஐக்கிய தேசியக்கட்சியையும் உள்ளடக்கிய ஐக்கிய தேசிய முன்னணியின் பக்கமும் இல்லை, நாங்கள் மஹிந்தவையும் ஆதரிக்கவில்லை, ரணில் விக்கிரமசிங்கவையும் ஆதரிக்கவில்லை”* – என்றெல்லாம் ‘புராணம்’ பாடியபடி – ஆக, *“ஜனநாயக முறைமை நேர்சீராக நடைமுறைப்படுத்தப்படுகின்றமையையும், அரசமைப்பு ஒழுங்காகப் பின்பற்றப்படுகின்றமையையும் மட்டுமே வலியுறுத்துகின்றோம்”* என்றும் கடந்த ஒரு மாதகாலமாக விளக்கம் கூறிவந்த தமிழ்க் கூட்டமைப்பின், உண்மை நோக்கும், போக்கும் இப்போது அம்பலமாகிவிட்டன.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசையே நாம் ஆதரிக்கின்றோம் என்றால், அதை அப்போதிருந்தே, வெளிப்படையாக அறிவித்து, நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் தென்னிலங்கை அரசியல் சிக்கல்கள் நேரத்துடனேயே முடிவுக்கு வந்திருக்குமோ என்னமோ...!

இப்போதும் கூட, எடுத்த முடிவை திட்டவட்டமாகவும், தெளிவாகவும் அறிவிக்காமல், தமிழ்க் கூட்டமைப்பு பிறகும் ஒளித்துப்பிடித்து விளையாடுகின்றது. தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் காதில் மட்டுமல்லாமல், முழு இலங்கை மக்களின் காதில் மட்டுமல்லாமல், அனைத்து மக்களின் காதிலுமே பூச்சுற்ற முனைகின்றது கூட்டமைப்பு என்றே தோன்றுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு புதிதாக ஆதரவு தருபவர்கள் போல அல்லாமல் தங்களைக் காட்ட முயல்கின்றது கூட்டமைப்பு. அதனால் ஜனநாயக மீட்சிக்காக, இதுவரை முன்னர் இருந்த அரசைத்தான் ஆதரிக்கின்றோம் என்றும் மக்களுக்குப் படம் காட்ட முயல்கின்றது கூட்டமைப்பு.

*“இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கடந்த (ஒக்டோபர்) 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை மீளமைப்பதற்கு ஆதரவளிப்போம்”* – என்ற சாரப்பட இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள் கூறியிருக்கின்றமை முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் வேலையன்றி வேறில்லை.

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு முன்னர் – மஹிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்கு முன்னர் – ஆட்சியில் இருந்தது, இப்போது கூட்டமைப்பினர் தமது கடிதத்தில் குறிப்பிடுகின்றமை போல ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசே அல்ல.

அது, ரணில் தலைமையில் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் சேர்ந்து அமைத்திருந்த நல்லாட்சி அரசு.

தனிந்து ஐக்கிய தேசிய முன்னணி தலைமையில் ஓர் அரசாங்கம் இப்போது பதவி ஏற்குமானால், அது புதிய ஏற்பாடே தவிர, ஒக்டோபர் 26 இற்கு முந்திய நிலையின் மீட்சியே அல்ல.

ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு கூடி எங்களின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று நேற்று முன்தினம் திட்டவட்டமாக ஒரு தீர்மானம் எடுத்துப் பிரகடனப்படுத்திய பின்னர் –

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்குவதை உறுதிப்படுத்தும் கடிதத்தை கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு வழங்குகின்றனர்.

அதை வழங்குவதில் கூட ஏன் இந்த ஒளித்துப் பிடித்து விளையாட்டு?

முன்னர் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஏற்படுவதை ஆதரிக்கின்றோம் என்று கடிதத்தை வெளிப்படையாகத் தெரிவித்து வழங்குவதுதானே...?

அதை விடுத்து, முன்பு ஆட்சியில் இருந்திராத ஓர் அரசை,அது ஒக்டோபர் 26 இற்கு முன்னர் ஆட்சியில் இருந்தது போல காட்டியும் –

ஐ.தே.முன்னணி தனது பிரதமர் ரணில்தான் என்று மீளவும் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் கூறிய பின்னரும், *“ஐக்கிய தேசிய முன்னணியால் நியமிக்கப்பட்ட – நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறக்கூடியவர் என நீங்கள் கருதும் ஒருவரைப் பிரதமராக நியமிக்க வேண்டும்”* – எனவும் பூடமாகக் காட்டியும் –

ஏன் ஒரு கடிதத்தைக் கூட்டமைப்பு வரையவேண்டும்?

ரணில் தலைமையிலான ஐ.தே.மு. அரசுக்கு பூரண ஆதரவு வழங்குகின்றோம் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கும் துணிச்சல் கூட்டமைப்புக்கு இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்பு ரணிலை முன்நிறுத்தியே செயற்பட்டு வருகின்றது என்று கூறப்பட்டபோது வேண்டுமென்றே, அதனை மூடி மறைத்து, புரட்டுக்கதைகளைக் கூறி அதனை மறைத்து வந்த கூட்டமைப்புக்கு , அதனை இப்போது பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வெட்கமாக இருக்கின்றது போலும்; கஷ்டமாக இருக்கின்றது போலும்.

# இராஜாங்க, பிரதி அமைச்சர்களுக்கு வேட்டு வைத்த ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, நவ. 30

அரசில் தற்போது, இராஜாங்க அமைச்சர்களோ, பிரதி அமைச்சர்களோ பதவியில் இல்லை என்று, அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல பங்கேற்கவில்லை.

இது குறித்து, ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, இது இடைக்கால பராமரிப்பு அரசே என்றும், எனவே, இராஜாங்க அமைச்சர்களோ, பிரதி அமைச்சர்களோ பதவியில் இல்லை என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க பதிலளித்தார்.

தற்போது அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே பதவியில்உள்ளனர் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கடந்த 9ஆம் திகதி கலைத்த பின்னர், இடைக்கால அரசு உருவாக்கப்பட்டது.எனினும், ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இடைக்கால கணக்கு அறிக்கையை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது

## ரவி கருணாநாயக்க திட்டவட்டம்

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்காமல் மஹிந்த அரசின் இடைக்கால கணக்கு அறிக்கையை அனுமதிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ரவி கருணாநாயக்க இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இடைக்காலக் கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகக் கூறுகின்றனர். முதலில் அமைச்சரவை ஒன்று இருக்க முடியாது. பெரும்பான்மை இல்லாத, நம்பிக்கை இல்லாத அரசொன்று எவ்வாறு அமைச்சரவையைக் கூட்ட முடியும்?

நாடாளுமன்றத்துக்கு வராத போலி அரசால் இடைக்கால கணக்கறிக்கையை நிறைவேற்ற முடியுமா? இடைக்கால கணக்கறிக்கையைத் தோற்கடிப்போம்.

முதலில் புதிய அரசு என கூறிக்கொள்பவர்கள் நாடாளுமன்றில் 85 முதல் 90 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதைக் காட்டுங்கள்–என்றார். (ஐ)

# சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறிவிடாதீர்கள்!

## அதிருப்தி அணியிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, நவ. 30

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ள அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



இந்தச் சந்திப்பானது நேற்று முன் தினம்ஜனாதிபதிசெயலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அதிருப்தியாளர்கள் சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவடையக் கூடாது என்பது தொடர்பில் எடுத்துரைத்ததுடன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எக்காரணம் கொண்டும் கட்சியிலிருந்து வெளியேறவேண்டாம் என்று அவர்களிடம் கோரிக்கையை முன்வைத்தார். (ஐ)

# தோல்வியை ஏற்றுக்கொள்ள மைத்திரி – மஹிந்த தயாரில்லை

## அமெரிக்க ஊடகம் கூறுகிறது

கொழும்பு, நவ. 30

இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியடைந்துள்ள போதிலும் தேர்தல் மூலம் அந்த ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணம் மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு ஏற்பட்டுள்ளதாக ‘பொரின் பொலிஸி’ என்ற அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை கவிழ்த்தார்.இதனையடுத்து சட்டவிரோதமாக மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார். எனினும் அவரால் அந்த ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளமுடியவில்லை. இது அவரைப் பொறுத்த வரை தோல்வியாகக் கருதப்படுகிறது. எனினும் அந்த தோல்வியை ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இல்லை.

அதேபோன்று அவரால் நியமிக்கப்பட்ட மஹிந்தவும் பிரதமர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. எனவே இருவரும் தாம் தீர்மானித்த தேர்தல் ஒன்றுக்குச் செல்வதையே குறியாகக் கொண்டுள்ளனர்.அதன்மூலம் மீண்டும் தங்களின் ஆட்சியைப் பிடிக்கலாம் என்பதே அவர்களின் எண்ணமாக உள்ளது.–என்றுள்ளது. (ஐ)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு**

16 2018

கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை

மறக்காத மகளிர் தினத்தில் மட்டும் மறுக்கப்பாடும் பெண் சுதந்திரம் பற்றி பேசாமல் நித்தமும் அதனை உணர்வதற்கான சுதந்திர சூழலை உருவாக்கக் கரம் கொடுப்போம்.

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC

**வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2018**

“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும். ”

–ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

**நாளை**

01.12.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 06.03வரை
திதி : நவமி மா. 5.54 வரை
சுபநேரம் :3.14 – 4.44வரை
இராகுகாலம் : 9.14 – 10.44 வரை

# மஹிந்தவின் நியமனத்துக்கு எதிராக தம்பர அமில தேரர் நீதிமன்றில் மனு

கொழும்பு, நவ. 30

*இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில், அடிப்படை உரிமை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வண. தம்பர அமில தேரர் நேற்று முன்தினம் இந்த மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.*



ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியும், மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புகளைச் செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று உத்தரவிடுமாறு கோரியுள்ள தம்பர அமில தேரர், இந்த மனு மீது உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை, பிரதமராக மஹிந்த செயற்படவும், அவரது அமைச்சரவையில் உள்ளவர்கள் அமைச்சர்களாகப் பணியாற்றவும் இடைக்காலத் தடை விதிக்குமாறும் கேட்டுள்ளார். (ஐ)

# அரசியலுக்கு வரார் ரொசான் மஹாநாம

கொழும்பு, நவ. 30

தான் அரசியலுக்கு வரவுள்ளார் எனச் சமூக ஊடகங்களில் வதந்திகள் பரப்பப்படுவதாக முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொசான் மஹாநாம தெரிவித்துள்ளார்.



இந்தத் தகவல்களைப் பார்க்கும் போது தான் புதுமைப்படுவதாகவும், தனக்கு அரசியலுக்கு வரும் எண்ணம் ஒரு போதும் இல்லை எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஒரு கிரிக்கெட் வீரராக நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் சரியான முறையில், தன்னால் முடியுமானவரைச் செய்துள்ளார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## துப்பாக்கி வெடித்தமையால் படைச் சிப்பாய் படுகாயம்!

வவுனியா, நவ. 30

வவுனியா, ஓமந்தை, கொம்புவைத்தகுளம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் துப்பாக்கி வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வெடிச் சத்தம் கேட்டதையடுத்து அப்பகுதியைப் பார்ப்பதற்காக நான்கு இராணுவச் சிப்பாய்கள் சென்றனர்.

அப்போது அங்கு காட்டுப் பகுதியில் கட்டிவைக்கப்பட்ட கட்டுத்துப்பாக்கிவெடித்ததில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.



படுகாயமடைந்த சிப்பாய் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக உயர்மட்டப் பேச்சுகளில் அங்கஜன்



யாழ்ப்பாணம், நவ. 30

சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக மேலதிகமாக மேற்கொள்ளப்படவேண்டிய பொறிமுறைகள் மற்றும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட விசேட குழு சார்பில் விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், கிழக்கு அபிவிருத்தி பிரதியமைச்சர் வியாழேந்திரன் மற்றும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் மஸ்தான் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை நேற்று முன் தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் குழுவினர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடனும் முக்கிய பேச்சு நடத்தியுள்ளனர்.

மீனவர்கள் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், வாழ்வாதார மேம்பாடுகள், இயற்கை அனர்த்த சூழ் நிலையின் போதான இழப்பீடு ஆகியன தொடர்பில் பிரதியமைச்சர் அங்கஜன் பொறுப்பான அமைச்சர்களுடன் சந்திப்புகளில் ஈடுபட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஹன்சார்ட் அறிக்கையில் பொய்யான தகவல்கள்

## சுட்டிக்காட்டுகிறார் கம்மன்பில

கொழும்பு, நவ. 30

கடந்த 14 ஆம் திகதி நாடாளுமன்றச் சபை நடவடிக்கைகளுக்கான ஹன்சார்ட் அறிக்கையில் பொய்த் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது குறித்து உதய கம்மன்பில நாடாளுமன்ற ஹன்சார்ட் ஆசிரியருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.



14 ஆம் திகதிக்குரிய ஹன்சார்ட் அறிக்கையின் திருத்தப்படாத பிரதியில் நாடாளுமன்றத்தில் இடம் பெறாத விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என உதய கம்மன்பில அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்தத் தினம் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சபாநாயகர் அவரது உரையில் 'இதற்கு பெரும்பான்மை இல்லை. என தெரிவித்திருந்தார்.

இருப்பினும், 'இவர்களுக்குப் பெரும்பான்மை இல்லை' என்ற சொற்றொடர் 'அவர்களுக்குப் பெரும்பான்மை இல்லை' என மாற்றப்பட்டுள்ளது என்றும், இதனை அன்றைய நாளுக்குரிய காணொளிகளூடாக உறுதி செய்ய முடியும் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அந்தக் கடிதத்துடன் காணொளிகளையும் இணைத்து அனுப்பியுள்ள உதய கம்மன்பில, இது குறித்து தேவையான திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறும் ஹன்சார்ட் ஆசிரியரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# நாடாளுமன்ற மோதல் குறித்து விசாரிப்பதற்குக் குழு நியமனம்

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றத்துக்குள் அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காகக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றப் பிரதிச் சபாநாயகரின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதனைச் சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சபாநாயகர் கூறினார். (ஐ)

# வவுனியாவில் எழுநீ விருது விழா

வவுனியா நகரசபையின் எழுநீ பண்பாட்டு முற்றம் நடத்தும் எழுநீ விருது விழா-2018 எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 02 மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள் ளது.

நகரபிதா இ.கௌதமன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினர்களாக அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள், அதன் உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், அதன் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

விருந்தினர்கள், பல்துறை சேவையாளர்களை வரவேற்றலைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம், வவுனியா நகர சபையின் உப தலைவர் சு.குமாரசாமி நிகழ்த்தும் வரவேற்புரை என்பன இடம்பெறும்.

அடுத்து, எழுநீ பண்பாட்டு முற்றத்தின் செயல் தலைவர் தமிழருவி த.சிவகுமாரனின் தொடக்கவுரை இடம்பெறும். தலைமையுரையைத் தொடர்ந்து அறிமுகவுரையை எழுநீ பண்பாட்டு முற்றத்தின் செயலாளர் கலாபூஷணம் மேழிக்குமரன் நிகழ்த்துவார்.

வவுனியா வீணாமிருத கலையகத்தின் வாத்திய பிருந்தா, முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் மீனவ நடனம், வவுனியா தெற்கு கலாசார குழுவினரின் 'உடரட்ட நட்டும்' சிங்கள நடனம் ஆகியன இடம் பெறும்.

அடுத்து எழுநீ விருது 2018 ஆவணநூல்வெளியீடும் பிரதம விருந்தினர் உரையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்ச்சியான, பல்துறை சார்ந்த 140 சேவையாளர்களுக்கு எழுநீ விருது வழங்கல் நிகழும். நன்றியுரையினை இந்திரன் சஜீந்திரா நிகழ்த்துவார். (ஐ)

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் வலுவான அரசியல் தலைமையே தேவை

## இந்திய அமைச்சர்கள் முன்னிலையில் பாக். பிரதமர் அறிவிப்பு

கர்தார்பூர்,நவ.30

இந்தியா- பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர் பிரச்சினையைதீர்க்கமுடியும்.ஆனால் அதற்கு வலுவான அரசியல் தலைமைகள் இரு பக்கங்களிலும் அவசியம் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கூறினார்.

பாகிஸ்தானின் கர்தார்பூரில், சீக்கிய மதத்தை நிறுவிய குரு நானக்தேவின் அடக்க ஸ்தலத்தில் தர்பார் சாகிப் குருத்வாரா கட்டப்பட்டு உள்ளது. இந்த நகரை இந்தியாவின் பஞ்சாப் மாநில எல்லையில் உள்ள தேரா பாபா நானக் நகருடன் இணைக்கும் விதமாக 4.7 கிலோ மீட்டர் தொலைவிற்கு இரு நாடுகளுக்கும் இடையே இணைப்பு சாலை அமைக்கப்படுகிறது.



சீக்கியர்கள் புனித யாத்திரை மேற்கொள்ள வசதியாக இந்த சாலை அமைக்கப்படுகிறது.

இந்தியாவில் வசிக்கும் இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் கர்தார்பூர் நகரில் நடந்தது. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினார்.இதில்பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜாவித் பாஜ்வா, இந்தியாவின் மத்திய மந்திரிகள் ஹர்சிம்ரத் கவுர் பாதல், ஹர்தீப் சிங் புரி மற்றும் பஞ்சாப் மந்திரி நவ்ஜோத் சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது இம்ரான்கான் பேசும்போது கூறியவை வருமாறு:-

நமது இரு நாடுகளின் உறவை முன்னெடுத்துச் செல்லவே நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவுடன் வலுவான, நாகரிகமான உறவை வைத்துக்கொள்ளவே பாகிஸ்தான் விரும்புகிறது.

நமது இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய பிரச்சினையாக இருப்பது காஷ்மீர் விவகாரம் மட்டும்தான். மனிதன் நிலவிற்கே சென்று வந்து விட்



டான். எனவே மனித குலத்தால் எந்த பிரச்சினைக்கும் தீர்வு காண இயலும். ஜேர்மனும், பிரான்ஸும் பல போர்களில் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. ஆனாலும் அந்த நாடுகள் தற்போது நெருங்கி நல்ல உறவைக் கொண்டுள்ளன.

அதேபோல் காஷ்மீர் பிரச்சினையை நம்மால் தீர்க்க முடியாதா? எல்லைப் பிரச்சினை விவகாரத்தில் இருபக்கமும் வலிமையான தலைமை தேவை. அப்போதுதான் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

இரு நாடுகளின் அமைதிக்காக நவ்ஜோத் சிங் சித்து இந்திய பிரதமராகும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. எனது பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டமைக்காக சித்துவை இந்தியாவில் கண்டித்து உள்ளனர். அப்படியென்ன அவர் குற்றம் செய்துவிட்டார்? - இவ்வாறு அவர் கூறினார்.

கர்தார்பூர்சாலைதிட்டத்துக்கு இந்திய பகுதியில் தேரா பாபா நானக் நகரில் கடந்த 26 ஆம் திகதி இந்தியத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு அடிக்கல் நாட்டியமை, நினைவு கூரத்தக்கது.

# சீக்கியர்களுக்கு எதிரான 1984 கலவரத்தின் சிறைத் தீர்ப்பு 34 ஆண்டுகளின் பின் உறுதி

### 88 குற்றவாளிகளில் பலர் ஏற்கனவே இறந்துவிட்டனராம்

சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் குற்றமிழைத்தவர்கள் என்று கூறப்படும் 88 பேரின் 5 ஆண்டுகால சிறைத் தண்டனையை உறுதி செய்து டெல்லி மேல் உத்திரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கடந்த 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் திகதி அவரது சீக்கிய பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் சீக்கியர்களுக்கு எதிராகக் கலவரம் வெடித்தது.

டெல்லியின் கிழக்கு பகுதியில் உள்ள திரிலோக்புரியில் நடந்த கலவரத்தில் 95 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 100 வீடுகளுக்குத் தீவைக்கப்பட்டது.

இது தொடர்பாக 1984 ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி 107 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 88 பேருக்கு5ஆண்டுகள்சிறைத்தண்டனை விதித்து 1996 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 ஆம் திகதி செசன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இந்தத்தீர்ப்பைரத்துச்செய்யக்கோரி 88 பேரும் டெல்லி மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் மீது 22 ஆண்டுகாலமாக விசாரணை நடந்து வந்தது.

இந்த நிலையில் டெல்லி மேல் நீதி மன்ற நீதிபதி ஆர்.கே.குப்தா செசன்ஸ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உறுதி செய்து நேற்று முன்தினம்உத்தரவிட்டார். இதன் மூலம் 88 பேரின் 5 ஆண்டுகால சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டது.எனினும்குற்றவாளிகளில் பலர் விசாரணை காலத்திலேயே இறந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளியானது ரஜினியின் ‘2.0’

ரஜினி நடிப்பில் ஷங்கர் இயக்கியுள்ள படம்'2.0'நேற்று வெளியானது. இந்தப் படம், 'எந்திரன்' படத்தின் இரண்டாம் பாகமாகும். ஹீரோயினாக எமி ஜாக்சன் நடிக்க, வில்லனாக அக்ஷய் குமார் நடித்துள் ளார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ள இந்தப் படத்தை, லைகா புரொடக்‌ஷன்ஸ் தயாரித்துள்ளது.

மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் படம், இந்திய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. முழுவதும் 3டி-யில் படம்பிடிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில், ஏராளமான கிராபிக்ஸ் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. உலகம் முழுவதும் இந்தப் படம் வெளியாகிறது.இந்தப் படத்தைப் பார்த்ததணிக்கைக்குழுஉறுப்பினர்கள், 'யு/ஏ' சான்றிதழ் அளித்துள்ளனர். மேலும், சில காட்சிகளைப் படத்தில் இருந்து நீக்கியதோடு, சில வார்த்தைகளும் மியூட் செய்யப்பட்டுள்ளன.

# 10,500 திரைகளில் ஒரே சமயத்தில் ரஜினியின் ‘2.0’ திரைப்படம் வெளியீடு

ஷங்கர் – ரஜினிகாந்த் இணையின் '2.0' திரைப்படம் உலகளவில் கிட்டத்தட்ட 10,500 திரைகளில் திரையிடப்படவுள்ளது. இதற்கு முன் 'பாகுபலி 2' திரைப் படம் 9000க்கும் அதிகமான திரைகளில் திரையிடப்பட்டதே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை '2.0' தற்போது முந்தியுள்ளது.

வட இந்தியாவில் மட்டும் கிட்டத்தட்ட 5000 திரைகளில் '2.0' திரையிடப்படும். ஆந்திரம் மற்றும் தெலுங்கானாவில் 1100, தமிழகத்தில் 900, கேரளாவில் 450, கர்நாடகாவில் 400 என இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 7800 திரைகள். அமெரிக்காவில் தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று பதிப்புகளையும் சேர்த்து 800 திரைகளில் வெளியாகிறது. படத்தின் வரவேற்புக்கு ஏற்ப இந்த எண்ணிக்கை கூடும் அல்லது குறையும். கனடாவில் மூன்று மொழி பதிப்புகளுக்கும் சேர்த்து 50 திரைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் மில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக வசூல் செய்த படங்களில், ரஜினி படங்களே நான்கு உள்ளன. இதில் ரஜினிக்குப் போட்டியே இல்லை. 'எந்திரன்', 'லிங்கா', 'கபாலி', 'காலா' படங்களைத் தொடர்ந்து '2.0'வும் மில்லியன் டொலர்களை வசூலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசியாவில் 140 திரைகளில் '2.0' வெளியாகிறது. இங்கு 'கபாலி'யின் வசூலை இதுவரை எந்தப் படமும்



முந்தவில்லை. அதே போல, பிரிட்டனில் எந்திரனின் வசூலை இதுவரை எந்தப் படமும் முந்தவில்லை. அங்கு '2.0' இம்முறை 297 திரைகளில் வெளியாகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் 300 லிருந்து 350 திரைகளில் '2.0' வெளியாகிறது. இங்கு மட்டும், முதல் நாளில், 700 இற்கும் அதிகமான காட்சிகள் திரையிடப்படவுள்ளன எனத் தெரிகிறது. இது சமீபத்தில் வெளியான அமீர்கானின் 'தக்ஸ் ஆஃப் ஹிந்துஸ்தானின்' முதல் நாள் காட்சிகளை விட அதிகமாகும்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட பகுதிகளில் '2.0' மொத்தம் 155 திரைகளில் வெளியாகிறது. ஆஸ்திரேலியாவைப் பொருத்தவரை அங்கு அதிகம் வசூலித்த படமாக 'பாகுபலி 2' இருக்கிறது. அடுத்த இடத்தில் 'கபாலி' இருக்கிறது.


'2.0', இந்தியாவில், மூன்று மொழிகளில் வெளியாகிறது. 'சப் டைட்டில்' களோடும் இரு தனிப் பதிப்புகள் தயாராக வுள்ளன.

# மத்தியபிரதேசம், மிசோரத்தில் அமைதியாக வாக்களிப்பு முடிவு

இந்தியாவின் மத்தியபிரதேசம், மிசோரம் மாநிலங்களில் நேற்று முன்தினம் சட்டசபை தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றன. இரு மாநிலங்களிலும் தலா 75 சதவீத வாக்குகள் பதிவாயின.

சத்தீஷ்கார், மத்தியபிரதேசம், மிசோரம், ராஜஸ்தான், தெலுங்கானா சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணையகம் முடிவு செய்தது. அதன்படி, சத்தீஷ்கார் மாநிலத்தில் கடந்த 12 மற்றும் 20 ஆம் திகதிகளில் இரு கட்டங்களாக வாக்குப்பதிவு நடந்து முடிந்தது.

பாரதீய ஜனதா ஆட்சி நடைபெறும் மத்திய பிரதேசத்திலும், காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் வடகிழக்கு மாநிலமான மிசோரத்திலும் நேற்று முன்தினம் ஒரே



கட்டமாக தேர்தல் நடைபெற்றது.

200 தொகுதிகளை கொண்ட மத்தியபிரதேசத்தில் 1,094 சுயேச்சைகள் உள்பட 2,899 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். வேட்பாளர்களில் 250 பேர் பெண்கள் ஆவார்கள். இந்த மாநிலத்தில் உள்ள 5 கோடியே 4 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 65 ஆயிரத்து 341 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன.

முதலமைச்சர் லால் தன்ஹாவ்லா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் மிசோரம் மாநிலத்தில் உள்ள 40 தொகுதிகளில் 15 பெண்கள் உள்பட 209 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

ஆளும் காங்கிரஸும், முக்கிய எதிர்க்கட்சியான மிசோ தேசிய முன்னணியும் அனைத்து தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன. பாரதீய ஜனதா 39 தொகுதிகளில் போட்டியிடுகிறது. மற்ற சிறிய கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றன.

இந்த மாநிலத்தில் உள்ள 7 லட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 1,179 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன.

இந்த இரு மாநிலங்களிலும், ஏற்கனவே தேர்தல் நடந்த சத்தீஷ்கார் மாநிலத்திலும், இனி வாக்குப்பதிவு நடைபெற இருக்கும் ராஜஸ்தான், தெலுங்கானாவிலும் டிசம்பர் 12ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

# இந்தியா – அமெ. – ஜப்பான் தலைவர்கள் மூவரும் தனியாகக் கூடி கலந்தாலோசனை

## ஆர்ஜென்ரீனாவில் இன்று ஆரம்பமாகும் 'ஜி – 20' உச்சி மாநாட்டின் இடையே





ஆர்ஜென்ரீனா நாட்டின் தலைநகர் புவனர்ஸ்அயர்ஸில் இன்றும் நாளையும் நடக்கும் 'ஜி–20' உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே ஆகியோர் ஒன்றாக சந்தித்து பேசுகின்றனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா உள்ளிட்ட 19 மிகப்பெரிய பொருளாதார நாடுகள் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு ஆகியவற்றை கொண்டது 'ஜி–20' குழு.

இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள அனைத்து நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

இதில் கலந்துகொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் புவனர்ஸ் அயர்ஸ் புறப்பட்டு சென்றார்.

இதையொட்டி அவர் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அதில் அவர், உலகளவில் முன்னணியில் உள்ள பொருளாதார நாடுகள் இடையே நல்லதொரு ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு ஜி–20 மிகச்சிறப்பான முயற்சியை எடுத்துள்ளது. உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கும், வளத்துக்கும் இந்தியா முக்கிய பங்களிப்பு செய்துள்ளது. நியாயமான, நிலையான வளர்ச்சிக்கு ஒரு மித்த கருத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்த உச்சி மாநாட்டின் மையப்பொருளாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இந்த உச்சி மாநாடு, உலக ளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

காரணம், வர்த்தகப்போரில் ஈடுபட்டு இருப்பதுடன், தென் சீனக்கடல் விவகாரத்தில் மோதிக் கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், சீன அதிபர் ஜின் பிங்கும் ஒன்றாக சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. இதே போன்று



உக்ரைன் விவகாரத்தில் ரஷியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிற நிலையில் அந்த நாட்டின் அதிபர் விளாடிமிர் புடினை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சந்திக்கக்கூடும்.

இந்தியாவுக்கும் இந்த மாநாடு, முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது.

இந்த மாநாட்டின் இடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே ஆகியோருடன் பிரதமர் நரேந்திரமோடி முத்தரப்பு சந்திப்பு நடத்துகிறார்.

இதை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் உறுதி செய்துள்ளார்.

இதுபற்றி அவர் நிருபர்களிடம் பேசுகையில், ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபேயை ஜனாதிபதி டிரம்ப் சந்தித்து பேசுகிறார். பின்னர் இவ்விரு தலைவர்களும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை கூட்டாகச் சந்திக்கிறார்கள் என்று கூறினார்.

மேலும், மோடி, டிரம்ப், ஷின்ஜோ அபே ஆகிய 3 தலைவர்களுக்கு இடையேயான முத்தரப்பு கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் இது முதல் முத்தரப்பு சந்திப்பாகவும் அமைந்துள்ளது. இந்த சந்திப் பின்போது இந்திய பசிபிக் பாதுகாப்பு பிராந்தியத்தின் நலன்கள் விவாதிக்கப்படும் என தகவல்கள் கூறுகின்றன.

பிரதமர் மோடியும், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் தனியாக சந்தித்து இரு தரப்பு பேச்சு நடத்துவதற்கான வாய்ப்பு உறுதி செய்யப்படவில்லை.

இதுபற்றி இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விஜய் கோகலே கூறும்போது, பல்வேறு இரு தரப்பு சந்திப்புகளுக்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இரு தரப்பு தலைவர்களின் சந்திப்பு, அவர்களின் நேர அட்டவணை அமைவதைப் பொறுத்துத்தான் வாய்க்கும் என குறிப்பிட்டார்.

இருப்பினும் சீன அதிபர் ஜின்பிங்கை பிரதமர் மோடி சந்தித்து பேச்சு நடத்த உள்ளார். கடந்த 7 மாதங்களில் இவ்விரு தலைவர்களும் சந்தித்து பேசுவது இது 4 ஆவது முறை ஆகும்.

ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ், ஆர்ஜென்ரீனா அதிபர் மொரிசியோ மேக்ரி, சிலி அதிபர் செபாஸ்டியன் பினரா, ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

# சீனாவில் இரசாயனத் தொழிற்சாலை அருகே திடீர் வெடிப்பு; 22 பேர் சாவு! 22 பேர் காயம்!

## 38 டிரக்குகள், 12 வாகனங்கள் தீயில் நாசமாகின



பெய்ஜிங்,நவ.30

சீனாவின் வடக்கு பகுதியில் இரசாயன தொழிற்சாலைக்கு வெளியே ஏற்பட்ட வெடிப்பில் குறைந்தது 22 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

பெய்ஜிங்கின் வடக்கு பகுதியில் இருக்கும் ஜாங்ஜியாகௌவில் உள்ள இரசாயன ஆலைக்குள் செல்லவிருந்த இரசாயனங்களை ஏற்றி வந்த வாகனமே வெடித்ததாக முதற்கட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களில், ஆலைக்கு வெளியே எரிந்த கார்களும் டிரக்குகளும் காணப்படுகின்றன.

2022ஆம் ஆண்டு சீனா நடத்தும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் சில போட்டிகளை ஜாங்ஜியாகௌவில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த விபத்து உள்ளூர் நேரப்படி இரவு 12 மணியளவில் நடைபெற்றுள்ளது. ஜாங்ஜியாகௌ நகரம் பெய்ஜிங்கின் வடமேற்கு பகுதியிலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ளது.

38 டிரக்குகள் மற்றும் 12 வாகனங்கள் தீயில் சேதமாகியன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்தில் ஆய்வு மற்றும் மீட்பு பணிகளும், விபத்தின் காரணத்தை அறிவதற்கான புலனாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலையில் உற்பத்திகள் நிறுத்தப்பட்டிருந்தன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சீனாவில் அதீத பொருளாதார வளர்ச்சி ஒருபுறம் காணப்பட்டாலும்,



தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் இரசாயன வெடிப்புகள் தொடர்பான சம்பவங்களால் அந்நாடு சிரமப்பட்டு வருகிறது என பிபிசி பெய்ஜிங் செய்தியாளர் ஸ்டீபன் மெக்டோனல் தெரிவிக்கிறார்.

இந்த வருடம் ஜூலை மாதம் சிச்சுவானில் இரசாயன ஆலையில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு தியன் ஜின் நகரில் உள்ள இரசாயன கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 173 பேர் கொல்லப்பட்டனர்.

ஊழல், அரசியல் தலையீடு மற்றும் அதிகாரிகளால் பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்படுதல் ஆகிய காரணங்கள் விபத்துக்கு காரணமென அதிகாரபூர்வ விசாரணையில் தெரியவந்தது.

# காபூலில் குண்டுவெடிப்பு குறைந்தது 10 பேர் பலி



ஆப்கான் தலைநகர் காபூலில் பிரிட்டன் பாதுகாப்பு நிறுவனமான G4S தாக்கப்பட்டதில் குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர். மற்றும் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

நிறுவனத்திற்கு வெளியே கார்க் குண்டை வெடிக்கச் செய்த துப்பாக்கிதாரிகள் சுற்றுச்சுவரை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர். இறந்தவர்களில் வெளிநாட்டுகாரர்களும் இருக்கின்றனர் எனப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடுமையான துப்பாக்கிசூடு நடந்துள்ளது. இந்த தாக்குதலுக்கு தாலிபன் பொறுப்பேற்றுள்ளது.

G4S என்பது பிரிட்டன் தூதரகத்தை சுற்றியுள்ள பகுதிகளை பாதுகாக்க உதவும் உலகின் பெரும் பாதுகாப்பு குழுக்களில் ஒன்றாகும்.

# ஒன்பதாயிரம் ஆண்டுகள் பழமையான கல் முகமூடி இஸ்ரேலில் காட்சிக்கு!



9000 ஆண்டுகால பழமையான கல்லால் ஆன முகமூடியை இஸ்ரேல் தொல்பொருள் ஆணையம் வெளியிட்டுள்ளது. உலகில் உள்ள 15 கல் முகமூடிகலில் இதுவும் ஒன்று.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் தெற்கில் உள்ள ஹெப்ரானை சுற்றியுள்ள பகுதிகளில் இந்தக் கைவினைப் பொருள் கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் திருடர்களிடம் இருந்து அதிகாரிகள் இந்த முகமூடியைக் கைப்பற்றினர் என இணைய நாளிதழான டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் செய்தி வெளியிட்டுள்ளது.

பிங்க் மற்றும் மஞ்சள் சேன்ட்ஸ்டோனால், நியோலிதிக் யுகத்தில் இது செய்யப்பட்டது.

இந்த முகமூடி மிக நேர்த்தியாக செய்யப்பட்டுள்ளது. கன்னத்தில் உள்ள எலும்புகள் மற்றும் மூக்கு எல்லாம் சரியாக அமைந்திருக்கின்றன – என்று இஸ்ரேல் தொல்பொருள் ஆணையத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ரோனித் லுபு, ஏ எஃப் பி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியத்தின் சுயமரியாதையை உயிர்ப்போடு வெளிப்படுத்திய மாவீரர் நாள்

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அரசியல் சூழலிலும் தமிழ்த் தேசிய உணர்வுடன் தமது இறைமை, தன்னாதிக்கம் போன்றவற்றுக்கான அங்கீகாரத்துக்குமான ஏக்கங்களோடு ஈழத் தமிழர்கள் கொள்கை மாறாமல் இருக்கின்றனர் என்பதை செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாவீரர் நிகழ்வுகள் ஊடாக எடுத்துக் கூறியுள்ளனர். வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் தடைகள், அச்சுறுத்தல்கள் போன்ற துன்பங்களைத் தாண்டி திட்டமிட்டபடி மாவீரர் நாள் நிகழ்வுகளில் மக்கள் கலந்துகொண்டனர். அமைப்பு ரீதியான ஒழுங்குபடுத்தல்கள் எதுவுமேயின்றி ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் மக்கள் தாமாகவே முன்சென்று நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தனர். விடுதலைப் புலிகளின் பாடல்கள் இசைகள் ஒதுவும் ஒலிபரப்பக் கூடாது என நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனாலும் நீதிமன்றத் தடையையும் தாண்டி மக்கள் புலிகளின் போர்க்காலப் பாடல்களை இசைத்தனர். இலங்கை ஒற்றையாட்சி அரசின் நீதிமன்றத் தீர்ப்புக்களையும் உத்தரவுகளையும் கொழும்பில் உள்ள சிங்கள அரசியல் தலைவர்களே மீறிச் செயற்படுகின்றனர்.




தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தாமல் இந்து, பசுபிக் சமுத்திரத்தை மையமாகக் கொண்ட பூகோள அரசியலில் நிம்மதியாக ஈடுபட முடியாதென்பதை இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு புரியவைக்க வேண்டியதே தமிழ்த் தரப்பின் பிரதான கடமை.

இந்த நிலையில் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பில் இருந்து விடுதலையாகி சுயாட்சி அதிகாரத்தோடு செயற்பட வேண்டுமென 70 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் போராட்டம் நடத்தி வரும் மக்கள் அந்த நீதிமன்றக் கட்டளைகளை மீறிச் செயற்பட்டமை குறித்து ஆச்சரியப்பட வேண்டிய அவசியமேயில்லை.

வடக்குக் கிழக்கில் சுயாட்சிக் கட்டமைப்பு வந்துவிடக் கூடாது என்பதிலேதான் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலிலும் இலங்கை அரசும் இலங்கைப் படைத் தரப்பும் கவனமாகச் செயற்படுகின்றன.

அதன் ஓர் அங்கமாகவே மாவீரர் நாளைக் கொண்டாடக் கூடாது என வலியுறுத்தி திருகோணமலை – கந்தளாய் பிரதேசத்தில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் இயல்பான எழுச்சியை சகித்துக்கொள்ள முடியாத நிலையில் சிங்கள இளைஞர்களில் சிலரை இலங்கைப் புலனாய்வுத் துறையினர் ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டியிருக்கலாம் என அங்குள்ள செய்தியாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

அதேவேளை, சிங்கள இளைஞர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையை திருகோணமலையைச் சேர்ந்தவரான நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ண சிங்கம் கண்டித்துள்ளார்.

இலங்கையில் இனஅழிப்பு போருக்குப் பின்னர், தாயக விடுதலைக்காய் தமது இன்னுயிர்களை ஈகம்செய்த மாவீரர்களது வித்துடல்கள் விதைக்கப்பட்ட துயிலுமில்லங்கள் அப்போதிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இலங்கை அரச படையினரால் அழித்தொழிக்கப்பட்டிருந்தன.

எனினும் தாயக மக்களால் துயிலுமில்லங்களில் பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்ட கல்லறைகளில் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் பங்குபற்றினர்.

தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் மாவீரர்களை நினைவுகூர்ந்து, உள்ளூர் நேரப்படி நேற்று காலை 10 மணிமுதல் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி ஆலய பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் நினைவுத் தூபி முன்றிலில் உள்ளூர் நேரப்படி காலை 10 மணிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்து இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாகவும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இராசாபாதை வீதியில் தமிழீழ மாவீரர் நாள் அஞ்சலி முற்பகல் 11.30க்கு இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

தொடர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால் பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபியில் அஞ்சலி வணக்கம் இடம்பெற்றது.

இவற்றைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் மற்றும் முழங்காவில் துயிலுமில்லங்களில் நினைவேந்தல் இடம்பெற்றது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு தமது அஞ்சலிகளை செலுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் மாவீரர் நாள் நிகழ்வு அனுட்டிக்கப்பட்டது. தேராவில் துயிலுமில்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம், முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம் ஆகியனவற்றில் வீர மறவர்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதுதவிர தமிழர் தாயகமான கிழக்கு மாகாணத்திலும் தாயக விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவுகூர்ந்து ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ்வாறு தாயகம் உட்பட அனைத்து இடங்களிலும் கடந்த செவ்வாய்க்கிழமை மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டது.

அதேவேளை, இந்த நிகழ்வுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றவில்லை. அவர்கள் இருவரும் கொழும்பு அரசியல் நெருக்கடி விவகாரத்தில் தங்களை முழுமையாக ஈடுதியதால் இந்த நிகழ்வுகளில் பங்குபற்ற முடியவில்லை என தமிழரசுக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

கொழும்பு அரச இயந்திரத்தை மையமாகக் கொண்ட இலங்கைத் தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் மைத்திரி – மஹிந்த ஜனநாயகத்துக்கு மாறாக செயற்படுகின்றனர் என்றோ, இலங்கையின் அரசியல் யாப்பு மீறப்படுகின்றது என்றோ சர்வதேச நாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்ய தேவை தமிழத் தரப்புக்கு இல்லை.

ஆனால் ஒவ்வொரு பிரதேசங்களிலும் மக்கள் இயல்பாகவே ஒன்று திரண்டு தமிழ்த் தேசியத்தின் சுயமரியாதையை வெளிப்படுத்திய இந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இலங்கைத் தீவில் இரு தேசிய இனங்கள் வாழ்கின்றன என்பதை சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தாமல் இந்து, பசுபிக் சமுத்திரத்தை மையமாகக் கொண்ட பூகோள அரசியலில் நிம்மதியாக ஈடுபட முடியாதென்பதை இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு புரியவைக்க வேண்டியதே தமிழ்த் தரப்பின் பிரதான கடமை.

மாறாக கொழும்பு அரச இயந்திரத்தை மையமாகக் கொண்ட இலங்கைத் தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் மைத்திரி – மஹிந்த ஜனநாயகத்துக்கு மாறாக செயற்படுகின்றனர் என்றோ இலங்கையின் அரசியல் யாப்பு மீறப்படுகின்றது என்றோ சர்வதேச நாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்டிய தேவை தமிழ்த் தரப்புக்கு இல்லை.

அத்துடன் அந்த அரசியல் நெருக்கடியில் ஒரு தரப்பை மாத்திரம் நியாயப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் ஜனநாயக மீறல், அரசியல் யாப்பு மீறல் என்பதை இருதரப்புகளுமே ஈழத்தமிழர் விடயத்தில் 1948 இல் இருந்தே மேற்கொண்டு வருகின்றன.

நன்றி: 'கூர்மை' இணையம்



# மைத்திரியின் விருப்பத்துக்கு ஆட முடியாது பெரும்பான்மையுள்ள ரணில்தான் பிரதமர்!

## ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு தீர்மானம்




கொழும்பு, நவ. 30

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே பிரதமராக நியமிக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ரணில் விக்கிரமசிங்கவை, பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, ஒரு நபரைத் திருப்திப்படுத்துவதற்காக, அரசமைப்பை முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, களுத்துறையில் கூட்டமொன்றில் உரையாற்றிய ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பிரதமரை தீர்மானிப்பது நாடாளுமன்றமே தவிர ஜனாதிபதி அல்லர் என்று கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தளபதி சூசையின் சகோதரர் சாவு



யாழ்ப்பாணம், நவ. 30

தமிழரின் மரபுக் கலைஞரும் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையின் (தில்லையம்பலம் சிவநேசன்) மூத்த சகோதரனுமான சிவலிங்கம் என அழைக்கப்படும் தில்லையம்பலம் தவராசா நேற்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 69.

வடமராட்சி பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த சிவலிங்கம், தமிழரின் மரபுக் கலைகளான சிலம்பாட்டம், உடுக்கு போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்தார். அவரால் பல மாணாக்கர்கள் உருவாக்கப்பட்டனர். (ஐ)

## கஞ்சா கடத்திய இரண்டு பேர் கனகராயன்குளத்தில் கைது!



வவுனியா, நவ.30

யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளம் நோக்கி 13 கிலோ கஞ்சாவைக் கப்ரக வாகனம் ஒன்றில் கடத்த முற்பட்ட இருவர், வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர். புத்தளம் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளக் கஞ்சா யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள விநியோகத்தர் ஒருவரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு, புத்தளத்தில் விற்பனை செய்வதற்காக எடுத்து செல்லப்பட்டது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளமையுடன் சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நெருக்கடியைத் தீர்க்க பொதுத் தேர்தலே வழி

### மல்வத்தபீடம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 30

அரசியல் நெருக்கடிக்கு ஒரே தீர்வு பொதுத் தேர்தலை நடத்துவதாகும் என மல்வத்த பீடத்தின் அனுநாயக்கர் அதி சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றச் சபாநாயகரின் தீர்மானங்களும், செயற்பாடுகளும் பாரபட்சமானதாக அமைந்திருப்பதாகவும் கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தேரர் குறிப்பிட்டார்.

சபாநாயகரின் செயற்பாடுகள் நிறைவேற்று அதிகார பீடத்துக்கும், சட்டவாக்கச் சபைக்கும் இடையில் முறுகல் நிலையை தோற்றுவிக்கலாம்.

இதனால் முன்வைக்கப்படும் வெவ்வேறு கருத்துக்களால் மக்கள் குழப்பமடையவும் நேரிடும். இதற்காகவே பொதுத் தேர்தல் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோருவதாக அதி சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி தேரர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பம்



கொழும்பு, நவ. 30

டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு, நாடளாவிய ரீதியில் ஆறு இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு 422,850 பாடசாலை பரீட்சார்த்திகளும் 233,791 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 656,641 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, 4661 பரீட்சை நிலையங்களில் 541 இணைப்பு நிலையங்களும், 33 பிராந்திய நிலையங்களாகக் கொண்டு இப்பரீட்சையை நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட பரீட்சை நிலையங்களாக இரத்மலானை, தங்கல்லை மற்றும் சிலாபம் ஆகிய பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகள் மற்றும் வைத்தியசாலைகளிலும் இப்பரீட்சைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். பிரகாசன் இப்பரீட்சை தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கும்போது –

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுகின்ற அனைவரும் சிறப்பாகவும், சரியாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டும். அத்துடன், மாணவர்களுடன் பொறுப்பு வாய்ந்ததாகவும் செயற்பட வேண்டும்.

இப்பரீட்சையை, வினைத்திறனுடன் நடத்தவேண்டும்.

இதேவேளை, பரீட்சை நிலையங்கள், இணைப்பு நிலையங்களில் ஆயுதம் தரித்த பொலிஸார் கடமையாற்றுவது உசிதமானதாகும். அவ்வாறு கடமையாற்றத் தவறும் பொலிஸாரை பொறுப்பானவர்கள் கண்காணிக்க வேண்டும்.

இது தவிர, பரீட்சை மோசடிகளை முன்கூட்டியே அனுமானித்து மோசடிகள், குழப்பங்களைத் தவிர்ப்பது மற்றும் மது போதையில் பரீட்சை நிலையங்களில் செயற்படுவது என்பன போன்ற விடயங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும், பரீட்சைக் கடமைகளில் பொலிஸார், புலனாய்வு அதிகாரிகள் மற்றும் அவசரப் பொலிஸ் பிரிவு ஆகியன ஈடுபடுத்தப்படவுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலங்கை விடயத்தில் தவறிழைத்துவிட்டோம்

### ஒப்புக் கொண்டது பேஸ்புக்



இலங்கை விடயத்தில், தாங்கள் தவறிழைத்து விட்டதாக சமூக வலைத்தளங்களில் ஒன்றான பேஸ்புக் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

லண்டனில் நடைபெற்ற போலிச் செய்திகள் தொடர்பிலான சர்வதேச விசாரணை ஒன்றின்போது, பேஸ்புக் நிறுவனத்தின் கொள்கை தீர்வு விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைத் தலைவர் ரிச்சர்ட் அலன் இந்த தவறை ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் விதமான முகப்புத்தக பதிவுகளை நீக்காதமை தங்களது நிறுவன நியதிகளுக்கு முரணான ஒரு பாரதூரமான தவறாகும் என அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இலங்கையில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் சிங்கப்பூரின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வின் தொங் கேள்வி எழுப்பியிருந்தார்.

சிங்களத்தில் பரவிய இனவாதத்தைத் தூண்டும் பேஸ்புக் பதிவுகளின் அடிப்படையிலேயே முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இவை உங்களது நிறுவனத்தின் நியதிகளுக்கு புறம்பானவை அல்லவா என எட்வின் எழுப்பிய கேள்விக்கு, ரிச்சர்ட் அலன் ஆம் என ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையில் கடுமையான முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான முகப்புத்தகப் பதிவுகள் பரவியதனால் பல உயிரிழப்புக்களும், உடமைச் சேதங்களும் ஏற்பட்டனஎனஎட்வின்குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான பதிவுகளினால் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதனால் இலங்கையில் பேஸ்புக் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டு இறுதியில் அரசு அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பேஸ்புக் பதிவுகளை நீக்குமாறு, அப்போது இருந்த இலங்கை தொலைதொடர்பு அமைச்சர் வேண்டிக் கொண்ட போதிலும் பதிவுகள் நீக்கப்படாமைக்கான காரணம் என்ன என அவர் வினவியுள்ளார். அதற்கு பேஸ்புக் பணியாளர் ஒருவரின் கவனயீனமே இதற்கான காரணம் என ரிச்சர்ட் அலன் பதிலளித்துள்ளார். (ஐ)



# என் கணவர் ஸ்ரீசாந்த் குற்றம் செய்யவில்லை

## இந்திய கிரிக்கெட் சபைக்கு மனைவி உருக்கமான கடிதம்

வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ள என்னுடைய கணவர் குற்றம் செய்ய வில்லை எனத் தடையில் இருக்கும் ஸ்ரீசாந்தின் மனைவி இந்திய கிரிக் கெட் சபைக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், கடந்த 2013ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாகப் புகார் எழுந்தது.

இதனையடுத்து ஸ்ரீசாந்த்துக்கு வாழ்நாள் தடை விதித்து இந்தியக் கிரிக்கெட் சபை உத்தரவிட்டது. இதனை நீக்கி டில்லி சிறப்பு நீதிமன்றம் உத்தர விட்டது. ஆனால் இந்தியக் கிரிக்கெட் சபை தடையை நீக்க மறுப்பு தெரி வித்தது.

தன்னுடைய தடை நீக்கப்படாத தால், கிரிக்கெட் வாழ்க்கை பாதிப் படைகிறது என கேரளா உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து ஸ்ரீசாந்த் அதில் வெற்றி பெற்றார்.

ஆனால் இந்தியக் கிரிக்கெட் சபை அதன் பிறகும் தொடர்ந்து தன்னுடைய நிலையிலிருந்து மாறவில்லை. இத னால் தற்போது உச்சநீதிமன்றத்தின் உதவியை நாடியிருக்கிறார்.

இது தொடர்பான வழக்கு நிலு வையில் இருந்து வரும் நிலையில், இந்தியில் சல்மான்கான் நடத்தி வரும் பிக் பாஸ் சீசன் 12 இல் கலந்து கொண்டிருக்கும் ஸ்ரீசாந்த், தன்னு டைய கிரிக்கெட் தடை குறித்து பேசி மனவேதனையைத் தெரிவித்தார்.

இதுபற்றி பலரும் இணையத் தளத்தில் கருத்து தெரிவித்து வந்த நிலையில், அதற்குப் பதிலடி கொடுத்து வந்த அவருடைய மனைவி புவனேஷ் வரி ஸ்ரீசாந்த் இந்தியக் கிரிக்கெட் சபைக்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதியுள்ளார்.

அந்த பதிவில் தன்னுடைய கண வர் குற்றமற்றவர் எனக் குறிப்பிட்டு அவர் எழுதியிருக்கிறார். (ஐ)

# எதிரணி பற்றி எங்களுக்கு துளியும் அக்கறையில்லை

## டிம் பெய்ன் கிளார்க்குக்கு பதிலடி

எதிரணியினர் நம்மை விரும்ப வேண்டுமென்றெல்லாம் யாரும் பேசவும் இல்லை, நினைக்கவும் இல்லை என ஆஸ்திரேலிய கிரிக் கெட் அணையின் தலைவர் டிம் பெய்ன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியினர் வாயை மூடிக்கொண்டு விளை யாட கூடாது. எனவே எதிரணியி னர் நம்மை விரும்பவேண்டும் எனக் கவலைப்படுவதை விடுத்து வெற்றிக்காக விளையாடவேண் டும் வேண்டும் என கிளார்க் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதற்குப்பதிலளித்த டிம்பெய்ன், எதிரணியினர் நம்மை விரும்ப வேண்டுமென்றெல்லாம் யாரும் பேசவும் இல்லை, நினைக்கவும் இல்லை. ஆஸ்திரேலிய மக்களின் நம்பிக்கையைப் பெறுவது பற்றித் தான் பேசினோம், விவாதித்தோம்.

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியை ஆஸ்திரேலிய ரசிகர்களும் மக்க ளும் விரும்ப வேண்டும். ஆனால் எதிரணியினர் நம்மை விரும்பு கின்றனரா, இல்லையா என்பது பற்றியெல்லாம் ஒரு துளியும் அக்கறையில்லை.

கட்டுப்பாட்டுடன் ஆஸ்திரேலிய பாணி கிரிக்கெட்டைத்தான் ஆடப் போகிறோம். மைக்கல் கிளார்க் கூறுவது போல்தான் ஆடுவோம். அதில் மாற்றமில்லை. டுபாயில் வீரர்கள் கடினமாகப் போராடினர், அதேபோல் கடினமாக விளையா டுவோம்.

இப்போது சில மூத்த வீரர்க ளும் அணிக்குள் வந்துள்ளனர். ஸ்டார்க், கமின்ஸ், ஹசில்வுட் இருக்கும் போது வீரர்களுக்கு தானாகவே நம்பிக்கை பிறக்கும். டிராவிஸ் ஹெட், மார்கஸ் ஹாரிஸ், ஆகியோர் மூலமும் அணிக்கு நம்பிக்கை கிடைத்துள்ளது. தன் னம்பிக்கையுடன் கூடிய ஆக் ரோஷ கிரிக்கெட் இதைத்தான் அவுஸ்ரேலிய பாணி கிரிக்கெட் என்கிறோம். நிச்சயமாக அப்படித் தான் ஆடுவோம்.

முன்பு எதிரணியினருடன் களத்தில் வார்த்தைப் பரிமாற்றங்



களில் கொஞ்சம் 'ஓ மச்' ஆகச் சென்றோம். இதனால் நாம் எதில் சிறந்தவர்களோ அதைக் கோட்டை விட்டோம். நம் அணியின் நம்பர் 1 வலு என்பது திறமைதான்.

எங்களுக்கு எதிராக துடுப்பாட டம் செய்வதைக் கடினமாக்கு வோம். பந்து வீசுவதைக் கடினமாக் குவோம். எங்களுக்கு எதிராக ஆடும் போது எதிரணியினருக்கு அசௌகரியமான ஒரு நிலையை உருவாக்குவோம். ஆனால் இவை யெல்லாம் எங்கள் திறமைகள் மூலம்தான் செய்வோம்.

எதிரணி வீரருடன் வார்த்தை விவகாரம் தனிப்பட்ட வீரரின் சுதந்திரத்துக்கு விட்டுவிட்டோம். சில வீரர்கள் இதனை விரும்புகின் றனர். பிறருக்கு இது ஒரு மேட்டரே அல்ல. இந்திய அணியிலும் சில வீரர்கள் இருப்பதால் களத்தில் நிச்சயம் உஷ்ணம் அதிகம் இருக் கும்.

இப்போது எங்களுக்கு எது சரி, எது தவறு என்பது தெரிந்துள்ளது. ஆனால் எது செய்தாலும் அள வுக்கதிகமாகப் போகாது. தேவைப் படும் போதுதான் அதுவும், ஆனால் முக்கியமானது சிறந்த கிரிக்கெட் டைத் திறமையுடன் ஆடுவதில் தான். – என டிம் பெய்ன் கூறினார்.

# ரென்னிஸ் வீரராகும் டோனி

இந்திய அணியின் முன்னாள் கப் டன் டோனி, ராஞ்சியில் நடைபெறவிருக் கும் உள்ளூர் ரென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்காகப் பயிற்சியில் ஈடுபட் டிருக்கும் வீடியோ காட்சி இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

2007ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண ரி-20 போட்டியில் இந் திய அணிக்காகக் கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் கேப்டன் டோனிக்கு, தற்போது ஆஸ்திரேலிய அணிக்கெதி ரான ரி-20 தொடரில் இருந்து ஓய்வ ளிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று அளிக்கப்படும் ஓய்வு நாட்களில் டோனி தன்னுடைய குடும்பத் துடன் பொழுதைச் செலவிடுவார். அப்படி இல்லை என்றால், கால்பந்து, கபடி, பட்மிண்டன், மோட்டார் பந்தயம் உள்ளிட்ட பிற விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

அந்த வரிசையில் தற்போது 37 வயதை அடைந்திருக்கும் டோனி, தனது சொந்த மாநிலமான ராஞ்சியில் இன்று முதல் தொடங்க உள்ள உள்ளூர் ரென் னிஸ் தொடரில் பங்கேற்க உள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதற்காக டோனி பயிற்சி மேற் கொள்ளும் வீடியோ காட்சி இணையத் தில் வைரலாக பரவி வருகிறது. (ஐ)






# முதலிடம் பிடித்தார் றபாடா

ஐ.சி.சி. டெஸ்ட் போட்டியின் பந்து வீச்சாளர் கள் தரவரிசையில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சனைப் பின்னுக்குத் தள்ளி தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் கேகிஸோ றபாடா முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக இறுதியாக இடம்பெற்ற டெஸ்ட்டில் 43 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஜேம்ஸ் ஆண்டர்சன் 10 வீதத் தரவரிசைப் புள்ளி களை இழந்தமை றபாடாவுக்கு முன்னேற வாய்ப்பானது.

பாகிஸ்தானின் மொகமட் அப்பாஸ் 3 ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் வெர்னான் பிலாண்டர், இந்தியாவின் ஜடேஜா, பாட் கம்மின்ஸ், ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் 4,5,6,7 ஆவது இடங்களில் உள்ளனர்.

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய யாசிர் ஷா முதல் 10 இடங்களுக்குள் நுழைந்து 10 ஆம் இடத்தில் இருக்கிறார், நியூசிலாந் தின் நீல் வாக்னர் 13ஆம் இடத்துக்கு தள் ளப்பட்டுள்ளார். (ஐ)

# பணக்கார கிரிக்கெட் வீரர்கள் முதலிடத்தில் விராட் கோஹ்லி

உலகின் பணக்கார கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் விராட் கோஹ்லி 2ஆவது ஆண்டாக தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 ஆகிய மூன்று வடிவிலான கிரிக்கெட் போட்டிகளி லும் சிறந்த வீரராக விளங்கும் கோஹ்லி உலகின் ஒட்டுமொத்த விளையாட்டு வீரர்களில் அதிக வருமானம் ஈட்டுவதில் 83ஆவது இடத்தில் உள்ளார்.

உலகின் பணக்கார விளையாட்டு வீரர்கள் 100 பேர் கொண்ட பட்டியலை போர்பஸ் அமெரிக்க வணிக பத்திரிகை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியலில் இந்தி யக் கிரிக்கெட் வீரர்களில் விராட் கோஹ்லி முன்னணியில் உள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்ட னான கோஹ்லி விளையாட்டு மட்டுமின்றி விளம்பரங்கள் மூலமாகவும் கோடிக் கணக்கில் வருவாய் ஈட்டி வருகிறார்.

இந்த ஆண்டில் மட்டும் அவர் ரூபா 170 கோடி வருமானம் ஈட்டியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இது பிரபல ரென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச்சின் வருவாயை விட அதி கமாகும். பூமா, பெப்சி, ஆடி மற்றும் ஓக்லே போன்ற முன்னணி பிராண்ட் விளம்பரத் தூதராக கோஹ்லி உள்ளார்.

மேலும் விளையாட்டு உபகரணங்கள், கடிகாரம், மோட்டார் சைக்கிள், துணி மணிகள், எலெக்ட்ரானிக் பொருட்கள் உள்ளிட்ட விளம்பரங்களிலும் அவர்



நடித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு உடன் தீர்வு காண ஜனாதிபதியும் சபாநாயகரும் நேரில் பேச்சு நடத்தவேண்டும் என்று கோரியிருந்தார். அதற்கு உதவத் தான் தயார் என்றும் கூறியிருந்தார்.

அத்துடன், பெரும்பான்மைப் பலமுள்ளவர்களிடம் அதிகாரத்தைக் கையளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், தனக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும், சுமுகமான உறவுகள் இருக்கின்றன எனவும் கூறியமையுடன், அவரைச் சந்தித்துப்பேசத் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார்.

இதன் பின்னணியிலேயே, நேற்று மாலை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை உறுதிப்படுத்தும் வகையில் சபாநாயகர் அலுவலகமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகிய கட்சிகளை இன்று வெள்ளிக்கிழமை நான் சந்திப்பேன். அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது பற்றிப் பேசுவேன்' – என்று சபாநாயகரிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாண மாநகர சபையின் சிறப்பு அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது.

சபை அமர்வின் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் நா. லோகதயாளன், மண்ணின் விடுதலைக்காக உயிரிழந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர், சபை அமர்வை ஆரம்பிக்கவேண்டுமெனவேண்டுகோள்விடுத்தார்.

இதன்போது, உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாகச் சம்மதம் தெரிவித்தனர். அவர்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

யாழ்.மாநகர முன்னாள் முதல்வரும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினருமான யோகேஸ்வரி பற்குணராஜா இதன்போது, போராட்ட காலத்தில் உயிரிழந்த அனைத்து இயக்க உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதாகவும், கடந்த காலங்களில் இவ்வாறு தொடர்ச்சியாகப் போராட்டங்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் பொது மக்களுக்கான அஞ்சலிகளைச் செலுத்தியமையையும் சுட்டிக்காட்டினார். (ஐ-07)

## தீர்மானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் மேற்படி தகவலை வெளியிட்டனர்.

அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, நிமல்சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ஸ, சுசில் பிரேமஜயந்த, மஹிந்த சமரசிங்க ஆகியோர் செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

சபாநாயகர் கருஜயசூரிய பக்கச்சார்பாகவே செயற்பட்டுவருகின்றார். அவரது உண்மைமுகம் என்னவென்பது தற்போது அம்பலமாகியுள்ளது. சட்டவிரோதமாக – தன்னிச்சையாக அவரால் நடத்தப்படும் சபை அமர்வில் பங்கேற்கமாட்டோம். இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தையும் எமது தலைவர்கள் கையளித்தனர்.

நாடாளுமன்றத்தைச் சிறிகொத்தா கட்சித் தலைமையகம் போன்றே சபாநாயகர் நடத்துகிறார். எனவே, கடந்த 14 ஆம் திகதி முதல் நிறைவேற்றப்பட்டுள்ள எந்தவொரு தீர்மானமும் செல்லுபடியாகாது. நிலையியல் கட்டளைக்கும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கும் புறம்பாகவே அவை நிறைவேற்றப்பட்டுள்ளமையால் தீர்மானங்களை ஏற்க மாட்டோம்.

பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம். அரசியல் குழப்பத்துக்கு மக்கள் வழங்கும் ஆணையிலேயே தீர்வு தங்கியுள்ளது என்றும் இதன்போது கருத்துகள் முன்வைக்கப்பட்டன. (ஐ)

## வெலிக்கடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படைகளின் பிரதானியான, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பில் 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை எதிர்வரும் டிசெம்பர் 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதிவான் ரங்கதிசநாயக்க உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில், அவர் கொழும்பு புதிய விளக்கமறியல் (மகசின்) சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரிடம், பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும்போது அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு, முழுமையான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு, வெலிக்கடைச் சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு, கோட்டை நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் தான் சுதந்திரமான உறுப்பினராகச் செயற்படப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் இதனைக் கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் சுதந்திரமான உறுப்பினராக இருந்தாலும், தாம் தொடர்ந்தும் கல்வி, உயர் கல்வி அமைச்சராகப் பதவியில் இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தபோதிலும், அரசதரப்பில், நேற்று அவர் மாத்திரமே, நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றார்.

நேற்றைய அமர்வில் உரையாற்றிய அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவும் தமது கட்சிகளைக் கட்டுப்படுத்த தவறிவிட்டனர் எனக் குற்றம்சாட்டியிருந்தார்.

அத்துடன், நாடாளுமன்றத்தில் யாருக்குப் பெரும்பான்மை உள்ளதோ அவரிடம் அரசைக் கொடுத்துவிடவேண்டும் என்றும் குறிப்பிட்ட அவர், தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, ஜனாதிபதி சபாநாயகர் பேச்சு நடத்தவேண்டும் என்றும் கோரியிருந்தார். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மரி யமஷிட்டா நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தணிக்கத் தாமதமின்றி முயற்சிகளை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், அந்த முயற்சிகளுக்குச் சர்வதேச சமூகம் முழு ஆதரவை வழங்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் உரிய விடயங்களைக் கையாண்டு இதற்கு முடிவைக் காணவுள்ளதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 123 பேர் வாக்களித்தனர். எதிராக ஒருவர்கூட வாக்களிக்கவில்லை. ஆளுங்கட்சியான மஹிந்த அணி சபை அமர்வை நேற்றும் புறக்கணித்திருந்தது.

நாடாளுமன்ற அமர்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் ஆரம்பமானது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினால் மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை மீது பிற்பகல் 12.10 மணி வரை விவாதம் நடத்தப்பட்டது. பிற்பகல் 12.20 மணியளவில் இந்தப் பிரேரணை மீது இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது 123 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜே.வி.பியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.க. முன்வைத்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிராக எவரும் வாக்களிக்கவில்லை.

பிரதமர் மஹிந்த தலைமையிலான ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் நேற்றைய சபை அமர்வில் பங்கேற்கவில்லை.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரச தரப்புக்குத் தாவிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் அத்துரலிய ரதன தேரரும் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றனர். இவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

அதேவேளை, அரச தரப்புக்குத் தாவி அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டபின், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பிவந்த வசந்த சேனநாயக்க பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இதன்படி 123 வாக்குகளால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது எனச் சபாநாயகர் கருஜயசூரிய அவைக்கு அறிவித்தார்.

பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதை அடுத்து, நாடாளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சபை அமர்வை வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் நேரில் பார்வையிட அனுமதியளிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியில் இருந்து நடந்த அனைத்து சம்பவங்களினதும் பின்னணியின் அடிப்படையில் மேற்குறித்த விடயம் தொடர்பாக நாங்கள் அக்கறை கொண்டு, இந்தக் கடிதத்தை எழுதுகின்றோம்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ, அவர் நியமிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும், இந்தக் கடந்த பகுதியில் பல தடவைகள் நாடாளுமன்றம் கூடியுள்ளபோதிலும், தனக்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை நம்பிக்கை உள்ளது என்பதை நிரூபித்துக்காட்ட முடியாத ஒருவராகக் காணப்படுகிறார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் மீது பிரதமராக இருப்பதற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் இம்மாதம் 14, 16ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

'குரல்' அடிப்படையில் எடுக்கப்பட்ட வாக்குகள் 122 உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதுமாத்திரமன்றி இது தொடர்பான சபாநாயகரின் அறிக்கைகளும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரதமராக இருப்பதற்கு நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ளாரா என்ற வினாவுக்குப் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து எதிராகவே உள்ளது. அதுமாத்திரமன்றி சந்தேகத் திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டும் உள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர், பிரதமராகத் தான் இருப்பதற்கு நாடாளுமன்றத்தில் நம்பிக்கையைப் பெற்றுள்ளார் என்பதை நிரூபித்துக் காட்ட இயலாது போயுள்ளது.

இந்நிலையில், அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரதமராக இருப்பதற்கு எதிராக இம்மாதம் 14 ஆம், 16ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களானது, இந்த நாட்டில் ஒரு பிரதமரோ, அமைச்சரவையோ சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட அரசு ஒன்றோ இருக்கின்றனவா என்ற முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது என்பதை நாம் மிகவும் மரியாதையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இதனால் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பிரதமராக நியமிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் இருந்த, ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசை மீள அமைப்பதற்கு ஆதரவளிப்போம்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணியினால் நியமிக்கப்படும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறக் கூடியவர் என நீங்கள் கருதும் நபரைப் பிரதமராக நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை ஜனாதிபதியாகிய தங்களுக்குத் தெரியப்படுத்துவது எமது கடமையாகக் கருதுகின்றோம் – என்றுள்ளது.

இந்தக் கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன், சி.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறீஸ்கந்தராசா, எஸ்.சிவமோகன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், கே.கோடீஸ்வரன், கே.துரைரெட்ண சிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (ஐ)

## ஜனாதிபதி மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரச்சினைகள் தலை தூக்கும்போது பேச்சு நடத்தித் தீர்வு காண்பதே சிறந்த வழிமுறையாகும். ஆனால், இங்கு சூழ்ச்சியே அரங்கேறியுள்ளது. இதுபற்றி எவ்வாறு பேச்சு நடத்துவது? ஜனாதிபதியும், சபாநாயகரும் தனிப்பட்ட ரீதியில் பேச்சு நடத்தலாம். அது அவர்களுக்குரிய உரிமை.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எள்ளளவேனும் நம்பமுடியாது. அவருடன் பேச்சு நடத்துவதற்கு நாம் தயாரில்லை. நிறைவேற்று அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஏற்க மறுக்கின்றார். பிழையெனத் தெரிந்தும் மீண்டும், மீண்டும் பிழையான செயல்களையே அவர் செய்துவருகின்றார்.

எனவே, அரசமைப்புக்கு ஜனாதிபதி அடிபணியவேண்டும். அதை செய்யவைப்பதே எமது இலக்காகும். நாம் ரணிலுக்குச் சார்பாகவோ அல்லது மஹிந்தவுக்கு எதிராகவோ செயற்படவில்லை. ஜனநாயகத்துக்காகவே குரல்கொடுக்கின்றோம் – என்றார்.

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என. ஆனால், இந்தப் பிரேரணைகள் மீதான வாக்கெடுப்புகளை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் புறக்கணித்து வருகின்றார். நான்கு பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்ட நாட்களில் நடைபெற்ற சபை அமர்வுகளிலும் அவர் பங்கேற்கவில்லை.

மஹிந்தவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. நேற்றும் சிவசக்தி ஆனந்தன் சபை அமர்வுக்கு வருகை தராமல் வாக்கெடுப்பை மறைமுகமாகப் புறக்கணித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் இந்த மாதம் மைத்திரி – மஹிந்த தரப்புக்குத் தாவி பிரதி அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார். கூட்டமைப்பிலிருந்து விலகியுள்ள தான் எதிர்க்கட்சி வரிசையில் சுயாதீன எம்.பியாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்து வந்த சிவசக்தி ஆனந்தனும் மைத்திரி – மஹிந்த தரப்புக்குத் தாவவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில், பிரதமர் மஹிந்தவுக்கு எதிரான பிரேரணைகள் மீதான வாக்கெடுப்புகள் நடைபெறும் நாள்களில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சபை அமர்வுகளில் பங்கேற்காமல் வாக்கெடுப்பை மறைமுகமாகப் புறக்கணித்து வருகின்றார்.

இது தொடர்பில் சிவசக்தி ஆனந்தன் எம்.பியின் கருத்தை அறிவதற்காக அவரின் கைத் தொலைபேசிக்கு நேற்றுப் பல தடவைகள் அழைப்பை ஏற்படுத்த முயன்றபோதிலும் அது பலனளிக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபை அமர்வுகளில் பங்கேற்று பிரதமர் மஹிந்தவுக்கு எதிரான பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லண்டனில் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு இடையில் இலங்கை அரசுக்கு எதிராக கையெழுத்துச் சேகரிப்பு

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்கள் மும்முரம்

யுத்தக் குற்றங்களுக்காக இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துமாறு பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரி நாடு கடந்த தமிழீழ செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து கையெழுத்துச் சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என பிரித்தானிய அரசாங்கம் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன் மொழியவேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒரு விவாதம் நடத்த வைப்பதே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

அந்தவகையில் கடந்த செவ்வாய்க் கிழமை லண்டனில் Royal Victoria Dock, 1 Western Gateway, London E16 1XL இல் அமைந்துள்ள ExCel மண்டபத்தில்



அனுஷ்டிக்கப்பட் ட மாவீரர் தினத்தில் கூடியிருந்த பெருமளவிலான தமிழ் மக்களிடம் துண்டுப்பிரசுரங்களை அவர்கள் வழங்கி பிரச்சாரங்களை முன்னெடுத்து அவர்களிடமிருந்து கையெழுத்துக் களைப் பெற்றனர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக புரியப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களுக்கும் போர்குற்றங்களுக்கும் இனப்படுகொலைக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்றே இக்கையெழுத்து வேட்டையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் பேணுதல், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை விடயங்களை மேம்படுத்துதல் தொடர்பாக செப்டம்பர் 2015 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக நிறைவேற்றுவோம் என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்கும் வாக்குறுதியளித்திருந்தது.

வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் பின்னிற்கின்றது. வழங்கப்பட்ட காலத்திற்குள் எந்தவொரு முன்னேற்றகரமான முயற்சியையும் எடுக்கவில்லை.

கடந்த வருடம் மார்ச் மாதம் ஐ. நா. மனித உரிமைச்சபையின் 34 ஆவது




கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் 2வருட கால அவகாசம் வழங்கப்பட்டது.

பொறுப்பு கூறல் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள், வெளிநாட்டு வழக்கறிஞர்கள், விசாரணையாளர்களை உள்நாட்டில் ஏற்றுக்கொள்ள அது தவறிவிட்டது

இலங்கை இராணுவம் தம்வசம் கைப்பற்றி வைத்திருக்கின்ற தமிழர்களது



காணிகள் முழுமையாக அவர்களிடம் திருப்பி கொடுக்கப்படவில்லை, அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிதல் தொடர்பில் விருப்பம் காட்டாமையையும் பின்னிற்கின்ற நிலைமையையும் இலங்கை கொண்டுள்ளது.

யுத்த காலத்தின் போது தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறல், நீதி வழங்கல் விடயத்தில் சிங்கள, பௌத்த பேரினவாதமிடமிருந்து தமிழ் மக்கள் எந்தவொரு நீதியையும் பெற்றுக்கொள்ளப்போவதில்லை.

சிறிலங்காவின் அரசுத் தலைவரும் தலைமை அமைச்சரும் மனித உரிமைப் பேரவைக்குத் தாங்களே அளித்த உறுதிகளைத் திரும்பத் திரும்ப மறுதலித்துள்ளார்கள், வெளிப்படையாகவே மறுதலித்துள்ளார்கள்.

சிறிலங்காவின் அதிபர் தலைவர் மைத்ரிபால சிறிசேனா அல் ஜசீரா செய்தித் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், 2009ம் ஆண்டு அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசுப் படைகள் போர்க்குற்றமே செய்யவில்லை என்று மறுத்துள்ளார்.

நவம்பர் 11, 2017ல் கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் 350 இராணு வீரர்கள் முன்னிலையில் சிறிலங்கா அரசுத் தலைவர் மைத்திரிபால கூறுகையில் 'சில குழப்பம் அடைந்த அரசியல்வாதிகளும், சில இளைப்பாறிய இராணுவ அதிகாரிகளும், போர் கதாநாயகர்களும் விசாரித்து தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். இந்த நாட்டு அதிபர்

என்ற வகையில் வெளிநாட்டு நீதிபதிகளின் முன் எவரையும் விசாரணக்கு இட்டுச் செல்லப்போவதில்லை" எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் உண்மைகளை மறுத்து, உலகை ஏமாற்றும்போக்கைக்காட்டியுள்ளநிலையில் சிறிலங்காவை மனித உரிமைகள் கவுன்ஸிலின் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது

மனித உரிமை தொடர்பில் அந்நாடு எவ்வளவு கொடிய வரலாறும் நிலைப்பாடும் கொண்டுள்ளது என்பதைத் தொடர்ந்து வெளிச்சத்தில் வைத்திருக்கும் என்பது மெய்தான். ஆனால் பாதிப்புற்றோருக்கு

நீதி கிடைக்க இது வழிகோலாது.

எனவே தான் எதிர்வரும் மார்ச் 2019 இல் ஐ நா மனித உரிமைச்சபையின் கூட்டதொடரில் இலங்கை விவகாரத்தை ஐ.நா.பொதுசபைக்கு (UN General Assembly) அனுப்பி, அங்கிருந்து பாதுகாப்பு சபைக்கு (Security Council) அனுப்பி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை பிரித்தானிய அரசாங்கம் கொண்டுவரவேண்டும் என்றே நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இக் கையெழுத்து மனுவை பிரித்தானியநாடாளுமன்ற உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக புரியப்பட்ட பாரியளவிலான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மானிடத்துக்கெதிரான குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தையும் 34/1 தீர்மானத்தையும் கூட்டாக முன்மொழிந்த நாடுகளில் ஒன்று என்ற முறையிலும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஒரு நிரந்தர உறுப்பு நாடு என்ற வகையிலும் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆதரவு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தேவைப்படுகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் இனவழிப்பு மற்றும் தொகையான கொடூரங்களுக்கெதிரான அமைச்சினாலேயே இந்தக் கையெழுத்துச் சேகரிப்பு முன்னெடுத்து நடாத்தப்படுகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகள் அமைச்சர் திரு பத்மநாபன் மணிவண்ணனின் தலைமையில், இப்பிரசாரத்திற்கான தலைமை ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராகிய செல்வி சோபனா ஜீவரட்ணத்தின் ஒருங்கிணைப்பில், இக் கையெழுத்து சேகரிப்பு கடந்த செவ்வாயன்று – மாவீரர் தின வேளையில் – நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் புண்ணியமூர்த்தி ஜெயதீபன் ,நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களான செல்வராஜா உமாகாந்த், சஞ்ஜீவ் குகதாசன் ஆகியோர் மிகத்தீவிரமாக கையெழுத்து சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# அனந்தி பதவி வகித்தபோது அமைச்சில் நிதி முறைகேடா?

### விசாரணைக் குழுவை நியமித்தார் ஆளுநர்

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் பதவி வகித்த காலப் பகுதியில் அவரது மாகாண மகளிர் விவகார அமைச்சினால் முறைகேடான முறையில் செலவழிக்கப்பட்ட 3 கோடி 20 இலட்சம் ரூபா பணம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே அமைத்துள்ளார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆளுநரிடம் விடுத்த எழுத்து மூலமான குற்றச்சாட்டுத் தொடர்பாக இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், வடக்கு மாகாணக் கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுரேந்தினி, மாகாண சுகாதாரத் திணைக்களக் கணக்காளர் கஜேந்திரன் ஆகியோர் இந்த விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் விசாரணைகளின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் றெஜினோல்ட் குரே விசாரணை குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறியால் பல்வேறு அமைச்சின் திணைக்களங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நிதி வடக்கு மாகாண ஆளுநர் சுயேச்சை நிதியத்தின் வங்கி கணக்கில் நிலையான வைப்பிலிடப்பட்டது. அதன் வட் டிப் பணத்திலிருந்து சிறுநீரகம் மற்றும் இதய சத்திர சிகிச்சை போன்ற நோய்களினால் வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவச் செலவுக்கு ஆளுநர் சுயேச்சை நிதியம் ஊடாக நிதி வழங்கப்பட்டு வந்தது.

ஆயினும் வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் அதன் அனைத்து நிதிகளும் அந்தந்தத்திணைக்களங்களுக்கு மீள் அளிக்கப்பட்டது. மாகாணக் கணக்காய்வுக் கூட்டத்தில் இந்த நிதியைப் பொருத்தமான திட்டங்களுக்கு மாகாண சபையின் அனுமதியுடன் செயற்படுத்தவேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கு மாறாக மகளிர் விவகார அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆளுநர் றெஜினோல்ட் குரே ஆரம்பித்துள்ளார். (ஐ-07)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.